# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–16, இதழ் – 8<br>Volume - 16, Issue - 8 | ஆடி திங்கள்<br>July 2025 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |
|---|---|---|---|---|





"Delivered by India Post"

www.indiapost.gov.in


Parvathy
Hospitals
How Long Will
You Hide It?
Treat
VARICOSE
VEINS
With Laser & VenaSeal
Exclusive Vascular Department
Scarless, Painless and
Sutureless Treatment
Same-day Discharge
044 2238 2248
To Know Your Treatment Options
Parvathy Hospital,
Chromepet, Chennai
Prof. Dr S. Prathap Kumar
M.S, MCh (Vascular Surgery) FVES (Austria)
Clinical Lead & Senior Consultant -
Vascular & Endovascular Surgeon

# வாழ்த்துகிறோம்



**ஜூலை 4ஆம் நாள் சதாபிஷேகம் காணும்**
**சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் நிறுவனர்**
**கார்குல வள்ளல்**

## திருமிகு. ச. வெங்கடேசன் பிள்ளை

## திருமதி வெ. ஞானாம்பிகை

**தம்பதியினரை வாழ்த்தி வணங்குகிறோம்.**



| V. ராமகிருஷ்ணன் | R. ஞானம் | R. பத்மநாபன் |
|---|---|---|
| பொருளாளர் | செயலாளர் | தலைவர் |



**காட்டுமன்னார்கோயில் ஒன்றிய கார்காத்தார் சங்கம்**



# ADYAR

## PADMANABHA NAGAR

**2 BHK - 960 sqft**

**3 BHK-1920 sqft**

- Prime Location
- Stilt + 3 Floors
- Premium Finish with Interior
- Solar Panel with Net Metering

***On Going Project***

**RAM NAGAR (Madipakkam)**

**(Near Ramar Temple)**

# 2BHK-86 L

- CALM RESIDENTIAL AREA
- STILT + 3 FLOORS
- CLOSE TO MRTS STATION & VELACHERY
- TOTAL 6 FLATS - ALL 2 BHK

***Ready for Occupation***

***(Near GST Road)***

# TAMBARAM WEST

**1400 SQFT - 3 BHK**

**ONE FLOOR**
**ONE FLAT**

- *We undertake* **CONSTRUCTION CONTRACT ON TURN-KEY BASIS** *right from Design & Approval.*
- *For profitable* **JOINT VENTURE** *Land owners are invited.*

# MALAR FOUNDATIONS

**94440 70108 / 70109 41135 / 97870 61547**




Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com






**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)


CELEBRATE LIKE A LANDLORD
DESTINATION
WEDDING
@
Saradharam's
LAKSHMI VILAS
HERITAGE HOTEL
NEAR VEERANAM LAKE
+91 9442591456 / 94425 91466
lakshmivilasheritage@gmail.com
http://www.lakshmivilasresort.com/
71/2, SIVANKOIL STREET, NEDUNCHERRY T. PUTHUR TAMIL NADU

LAUNCHING

NAPA VALLEY

BY DAC

DAC™

DREAM ASCEND CONQUER

# LOCATED NEAR OMR AT HALF THE PRICE OF OMR

**LAUNCHING ON 12th & 13th July**

( 10 Mins From Sathyabama & Perumbakkam Metro )



**Near Sholinganallur — Bang On Main Road —**

25+ AMENITIES









OMR Market Price ~~₹1.10 Cr.~~

**2&3 BHK Apts.**
Launch Price
From ₹ 59L*
(For first 25 bookings only)

Scan For Location

## Location Advantage

**METRO STATIONS**
Sathyabama University Metro - **10 Mins**
Perumbakkam Metro - **10 Mins**

**IT PARKS**
Elcot Sez - **14 Mins**
Sipcot IT Park - **20 Mins**

**HOSPITALS**
H & M Hospital - **6 Mins**
Gleneagles Global Health City - **10 Mins**

**SCHOOLS**
BVM Global School - **3 Mins**
Orchids The International School - **4 Mins**

**COLLEGES**
Prince Shri Venkateshwara Engineering College - **10 Mins**
Sathyabama University - **11 Mins**

**ATTRACTIONS**
Vivira Mall - **10 Mins**
AGS Navalur - **10 Mins**

| UNIT TYPE | SQ.FT. RANGE | MARKET PRICE | OUR LAUNCH PRICE* |
|---|---|---|---|
| 2BHK+2T | 941 - 1001 | 75 L - 80 L | 59 L - 64 L |
| 2BHK+2T+PVT | 941 - 1096 | 90 L - 95 L | 63 L - 71 L |
| 3BHK+2T | 1146 - 1216 | 95 L - 1.15 Cr | 71 L - 75 L |
| 3BHK+2T+PVT | 1035 - 1218 | 1.05 Cr - 1.25 Cr | 66 L - 79 L |
| 3BHK+3T | 1314 - 1474 | 1.25 Cr - 1.40 Cr | 81 L - 94 L |
| 3BHK+3T+PVT | 1274 - 1456 | 1.45 Cr - 1.85 Cr | 81 L - 94 L |

2T - 2 Toilets 3T - 3 Toilets PVT - Private Terrace

110+ PROJECTS | 3.5M+ SQFT CONSTRUCTION | 3000+ HAPPY FAMILIES

Member CREDAI
www.dacdevelopers.com

93003 93003

TN/35/Building/0166/2025 dated 02.05.2025 | www.rera.tn.gov.in | *T&C Apply

# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**




**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

---

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

**சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.**

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

## இதழின் உள்ளே....



சங்க நிகழ்வுகள் ........ 11–18

தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்........ 19

சங்கப் பலகை ........ 22

மணமகன் / மணமகள் தேவை ........ 42–44

சிறுவர் பகுதி........ 46–49

**கார்காத்தார் ஒப்புரவு**

**கார்காத்தார் சங்கம் (சென்னை)**

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**

**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



இனிய கார்குல உறவுகளுக்கு கார்காத்தார் ஒப்புரவின் வணக்கங்கள் பற்பல.

செனாய் நதியின் மீது 1178 அடி மேலே, இரண்டு மலைகளை இணைக்கும் உலகின் மிக உயரமான ரயில் பாலத்தை பாரத பிரதமர் மோடி அவர்கள். ஜூன் 6–ஆம் தேதி திறந்து வைத்துள்ளார். உதம்பூர் ஸ்ரீநகர் – பாரமுல்லா ரயில் பாதைத் திட்டத்தின் ஒரு பகுதியாக செனாப் நதி மீது பாலம் அமைக்க வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் முடிவெடுத்து, 2002–ல் அனுமதி வழங்கப்பட்டு, 2007–ல் பணி துவங்கி, 2025–ல் முடிவடைந்துள்ளது. நில நடுக்கம், பனிப்பொழிவு, உறைபனி என பல்வேறு இயற்கை அபாயங்களை சமாளிக்கும் வகையில் பொறியியல் தொழில் நுட்பத்துடன் 1486 கோடி ரூபாய் செலவில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதிவேக ரயிலான வந்தே பாரத் சோதனை ஓட்டமும் ஜனவரியில் நடத்தப்பட்டு, ஜூனில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இதன் வெற்றிக்காக உழைத்த அனைவருக்கும் நன்றியும், பாராட்டுக்களும்.

ஓட்டுநர் இல்லாத மெட்ரோ ரயில் 3–ஆம் கட்ட சோதனை ஓட்டம், பூந்தமல்லி போரூர் பாதையில் வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது. இந்தாண்டு இறுதியில் சேவை துவங்கும் என மெட்ரோ ரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பெங்களூர், சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த RCB அணியின், 18 வருட காத்திருப்புக்குப் பின் கிடைத்த IPL வெற்றிக் கொண்டாட்டத்தில் 11 பேர் இறந்துள்ளனர். 47 பேர் காயம் அடைந்துள்ளனர். மகிழ்ச்சியாக நடைபெற வேண்டிய ஒரு நிகழ்ச்சி பெரும் சோகத்தில் முடிவடைந்ததை என்னவென்று சொல்வது ? மக்களின் அஜாக்கிரதையா ? ஆர்வக்கோளாறா ? ஏற்பாட்டாளர்களின் தவறான கணக்கா ? அதிகாரிகளின் கவனக் குறைவா ?

ஒரு சமயத்தில், அமெரிக்க அதிபர் டிரம்பின் தீவிர ஆதரவாளராக இருந்த தொழிலதிபர் எலான்மஸ்க் தற்சமயம் எதிர்ப்பாளராக மாறியதுடன், 'தி அமெரிக்க பார்ட்டி' எனும் புதிய கட்சி ஆரம்பிப்பதாக தனது சமூக வலை தளத்தில் அறிவித்துள்ளார்.

கடந்த ஜூன் 12–ம் தேதியன்று லண்டன் நோக்கிப் புறப்பட்ட போயிங் 787–8 ட்ரீம்லைனர் வகை ஹ1171 எனும் விமானம், ஆமதாபாத் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஒரு நிமிடத்திற்கு உள்ளாகவே விபத்துக்குள்ளானது.

விமானத்தில் இருந்த ஒருவர் மட்டுமே விபத்தில் இருந்து தப்பிய நிலையில் விமானப் பணியாளர்கள் உட்பட எஞ்சிய அனைவரும் உயிரிழந்தனர்.

விமானம் புறப்படும் பொழுது தேவையான முன்விசை (Thrust) பெறமுடியாமல் போனதால், ஓட்டும் நிலையில் இருந்தபோதே, திடீரென தரையிறங்கி, B1 மருத்துவக் கல்லூரி ஹாஸ்டல் மீது மோதி விழுந்தது. இதனால் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பலரும் குறிப்பாக சிலர் மதிய உணவு உட்கொள்ளும் நிலையில் பரிதாபமாக இறந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவம், இந்தியாவின் நவீன விமானப் போக்குவரத்து வரலாற்றில் மிகுந்த பரிதாபத்துக்குரிய நிகழ்வாக கருதப்படுகிறது. இந்த விபத்து, இந்திய விமானப் போக்குவரத்து துறையில் ஒரு பொதுவுடமை உணர்வையும், பாதுகாப்பு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

நமது மாணவர்களுக்கு அவர்கள் விரும்பிய கல்லூரியில் சேர்ந்து நன்முறையில் படித்து முன்னேற வாழ்த்துவோம்!

– நன்றி! வணக்கம்!

## கார்குல கலாச்சார சங்கமம் விழா - கும்பகோணம்

### முக்கிய அறிவிப்புகள்

1) **2025 ஆகஸ்ட் மாதம் 10ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை** காலை கும்பகோணம், செட்டி மண்டபம் பைபாஸ் சாலையில் உள்ள **மகாலட்சுமி மஹாலில்** விழா நடைபெறும். உங்கள் அனைவரையும் உறவினர்களுடன் விழாவில் கலந்து கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.
2) இறுதிச்சுற்று போட்டிகள் அரங்கத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டு உள்ளது.
3) தேசிய,மாநில, மாவட்ட அளவில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றவர்களைப் பாராட்ட விழைகிறோம்.

   தொடர்பு கொள்ள **வேண்டியவர்கள்: திருமதி மகேஸ்வரி – 9894979791, திருமதி மேகலா – 9659667205**
4) பரதநாட்டியம், ஓரியண்டல் நடனத்தில் பங்கேற்க விரும்புபவர்கள் 5 /6 நிமிடங்களுக்கு மிகாமல் நடனத்தை வீடியோ எடுத்து **திருமதி வனஜா இளங்கோவன் 6369291286 மற்றும் திருமதி இந்துமதி 9659331212** அவர்களின் whatsappற்கு அனுப்பி வையுங்கள்.கதக், குச்சிப்புடி போன்ற நடனங்களும் போட்டியில் பங்கேற்கலாம்.
5) தனித்திறமைக்கான வீடியோவும் 5/6நிமிடங்களுக்கு மிகாமல் எடுத்து அனுப்பவும். Like Talented in Instrumental music, monoact, mimicry etc மற்றும் only portraits வரவேற்கப்படுகின்றன. தொடர்பு கொள்ள : **திருமதி குந்தவி – 9840488823, திருமதி லலிதா – 9940595359**

**அனுப்ப வேண்டிய கடைசி நாள்:25/7/25**

---

### கார்குலப் பெற்றோர்களுக்கு ஓர் வேண்டுகோள்;

தங்கள் குழந்தைகளை ஊக்கமூட்டி போட்டியில் பங்கேற்க செய்யுங்கள். நன்றி!

### அறிவிப்பு 2

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 95 விழுக்காடும் அதற்கு மேலும் வாங்கியவர்கள் விழாவில் பாராட்டப்பட உள்ளார்கள்.

மேலும் கல்லூரியில் CGPA 8.5 அல்லது அதற்கு மேலும் வாங்கியவர்கள் விழாவில் பாராட்டப்பட உள்ளார்கள். அவர்கள் whatsappல் மதிப்பெண் சான்றிதழ் ஃபோட்டோவை

**திருமதி சரஸ்வதி .பா** or **திருமதி R. கலையரசி** அவர்களின் அலைபேசி எண்ணிற்கு அனுப்பி வையுங்கள்..

**திருமதி சரஸ்வதி – 9842430060, திருமதி R. கலையரசி – 9790841851**

நன்றி! வணக்கம்!

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 22–6–25 அன்று சங்க கட்டிட வளாகத்தில், துணைத் தலைவர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தலைமையில் மலர்ச்சி இறைவணக்கப் பாடலுடன் துவங்கியது.

சங்க உறுப்பினர் நங்கநல்லூர் திருமதி. உமா சீனுவாசன் மற்றும் சிட்லபாக்கம் சமூக ஆர்வலர் திரு. T. முருகேஷ் இவர்களின் தாயார் சுப்புலட்சுமி அம்மாள் மறைவுக்கும், சங்க உறுப்பினர்கள் மேடவாக்கம் A. சிங்காரவேலு (ம) பெரும்பாக்கம் திரு. A. துரை இவர்களது சகோதரர் A. இராஜேந்திரன் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட அறிக்கை தொடர்ந்து சங்கத்தின் பிற நிகழ்வுகளும் சங்க செயலாளர் அவர்களால் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சங்க பொருளாளர் திரு. V. செல்வக்குமார் சமர்ப்பித்த வரவு, செலவு கையிருப்பு விவரத்தினை குழு ஏற்றுக்கொண்டது.

ஆகஸ்ட் மாத இறுதியில் கொங்கு மண்டலத்தில் சுற்றுலா செல்ல இறுதி செய்யப்பட்டு முன்பதிவும் துவங்கியது.

கடந்த 20–6–2025 அன்று அகவை 80 பூர்த்தி செய்து சதாபிஷேகம் (ம) ஆயிரம் பிறைகண்ட கார்குல வள்ளல் திரு. ச. வெங்கடேசன் பிள்ளை – திருமதி. ஞானாம்பிகை தம்பதியரை சங்க நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் நேரில் சந்தித்து அன்பு பரிசு அளித்து ஆசி பெற்றனர்.

திரு. S. சம்பத்குமார், செயற்குழு உறுப்பினர் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

- G. தியாகராஜன்,
செயலாளர்.

### அண்ணாநகர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 15–06–2025 அன்று "நான் ஒரு ஐஏஎஸ் அகாடமியில்" தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. S. சிவப்பிரகாசம் அவர்களின் மைத்துனரும், ஆயுட்கால உறுப்பினர் திரு. பாண்~~டியன் அவர்களின் மாமாவுமான~~ திரு. கும்பலிங்கம் பிள்ளை மயிலாடுதுறையில் 05–06–2025 அன்று இயற்கை எய்தினார்கள். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இரண்டு நிமிடம் "மௌன அஞ்சலி" செலுத்தப்பட்டது.

அண்ணாநகர் சங்கத்தின் "பொதுக்குழு" அக்டோபர் இரண்டாம் தேதி நடைபெறும் இந்த வருடம் அக்டோபர் ஒன்று மற்றும் இரண்டில் சரஸ்வதி பூஜை மற்றும் விஜயதசமி வருவதால் பொதுக்குழுவை 05–10–2025 ஞாயிறு அன்று நடத்தலாம் என முடிவு செய்யப்பட்டது.

துணைதலைவர் திரு. V. இராஜசேகரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- J. கோபாலகிருஷ்ணன்

### புதுச்சேரி :

08–06–2025 அன்று சங்க கூட்டம் துணைத்தலைவர் திரு. S. தமிழ்ச்செல்வன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. திரளான நம் சொந்தங்கள் கலந்து கொண்டது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது.

10–08–2025 ஞாயிற்றுக்கிழமை குடந்தையில் நடைபெறும் மகளிர் அணி நடத்தும் மாநிலம் தழுவிய கார்காத்தார் கலாச்சார சங்கமத்தில் திரளாக கலந்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு சென்று வர ஆகும் போக்குவரத்து செலவை சங்கம் ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. குடந்தையில் நடக்க இருக்கும் கூட்டம் மாநிலம்

தழுவியதால் அதற்காக நம் புதுச்சேரி சங்கத்தின் சார்பில் ரூ. **50000/–** நன்கொடை எதிர்பார்க்கிறார்கள். அதற்கு புதுச்சேரி மகளிர் அணி நிர்வாகிகள் நம் சொந்தங்களை நேரிலோ, தொலைபேசி வாயிலாகவோ, வாட்சப் குரூப் மூலமாகவோ தொடர்பு கொள்வார்கள். அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து தாராளமாக நிதி வழங்க இந்த கூட்டம் கேட்டுக்கொண்டது. அரியாங்குப்பம் கொம்யூன், காக்காயந்தோப்பு, வீராம்பட்டினம் வீதி, நெ. **75**–ல் வசித்த திரு. ஜெ. நடராஜன் அவர்கள் மறைவுக்கு கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

நம் பொருளாளர் தொலைபேசி வாயிலாக கேட்டுகொண்டதற்கு இணங்க அடுத்த மாதக் கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டமாக அவர்கள் இல்லத்தில் வருகிற **06–07–2025** ஞாயிற்றுக்கிழமை மாலை **4.00** மணிக்கு நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த மாத குலுக்களில் ஆண்களுக்கான பரிசு திரு. S. தமிழ்ச்செல்வன் அவர்களுக்கும், மகளிர்க்கான பரிசு திருமதி. சுந்தரவள்ளி ஆனந்தன் அவர்களுக்கும் கிடைத்தது.

கூட்டம் நடத்த ஏற்பாடு செய்த குடும்பத்தார் திரு. S. தமிழ்ச்செல்வன் – திருமதி. மலர்கொடி சங்கத்தால் கௌரவிக்கப்பட்டார்கள். கூட்டம் நடத்தும் குடும்பத்தாருக்கு அதிக சிரமம் கொடுக்கக்கூடாது என்றும் டீ, காபி மற்றும் ஸ்னாக்ஸ் செலவை சங்கமே ஏற்கலாமா என்று செயலாளர் S. வெங்கடேசன் ஆலோசனை கேட்டார்கள்.

திருமதி. மலர்கொடி தமிழ்ச்செல்வன் அவர்கள் விருந்தோம்பலுக்கு சொந்தங்கள் நன்றி கூற இனிதே நிறைவடைந்தது.

- J. ராஜன்பாபு, தலைவர்.

**9600968628**

## விருத்தாச்சலம்

விருத்தாச்சலம் கார்காத்தார் சேவை குழுவின் சார்பில் **15–06–2025** அன்று திரு. பன்னீர்செல்வம் அவர்களின் இல்லத்தில் தலைவர் தலைமையில் மண்டல செயலாளர் உரையுடன் கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்து கார்காத்தார் குல சொந்தங்களும் (ம) இளைஞர் அணி நமது மகளிர் அணி அனைவரும் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை தெரிவித்தனர். கௌரவ தலைவர் உரையில் கல்வி ஊக்கத்திற்காக **6**–ஆம் வகுப்பு முதல் **12**–ஆம் வகுப்பு வரை பொறுப்பாளர்களிடம் விண்ணப்பம் படிவம் பூர்த்தி செய்து கொடுக்கும் வகையில் தெரிவிக்கப்பட்டது. மகளிர் அணி தலைவி உரையில் கும்பகோணம் நகரில் மாநில மகளிர் அணி மாநாடு அதில் நமது சங்கத்தின் சார்பில் கலந்து கொண்டு சிறப்பு செய்வது பற்றி எத்தனை பேர் செல்வது பற்றி கார்காத்தார் பற்றி விழிப்புணர்வு போட்டி நடத்த ஆலோசனைகள் கேட்கப்பட்டது. அனைத்து உறுப்பினர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். மகளிர் அணி நன்றி உரையுடன் கூட்டம் முடிந்தது.

பூதாமூர் திருமால் பிள்ளை மகன் இல்லத் திருமண வரவேற்பு விழா GN. மஹாலில் சங்கம் சார்பில் மணமக்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது.

**20–06–2025**–ல் பிறந்த நாள் காணும் நமது கார்குல மனிதநேய கொடை வள்ளல் வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துக்கொள்கிறோம்.

விருத்தாசலம் நகரில் சில பகுதியில் Data விண்ணப்பம் பூர்த்தி செய்து சங்கத்தில் ஒப்படைத்தனர்.

- J. சந்திரசேகரன்,

தலைவர்.

## காட்டுமன்னார் கோவில் :

சங்க செயற்குழு கூட்டம் **25–6–25** அன்று செயலாளர் திரு. V.R. ஞானம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. செயலாளர் திரு. ஞானம் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தலைவர் திரு. R. பத்மநாபன் உரைக்கு பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. வரும் ஆகஸ்ட் **15**–ந் தேதி பொதுக்குழு கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. பொறுப்பாளர்கள் பதவி காலம் முடிவடைய உள்ளதால் புதிய பொறுப்பாளர்கள் பதவிக்குதேர்தல்நடத்துவதுஎனமுடிவெடுக்கப்பட்டது. பொதுக்குழு கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக மாநில சங்க பொருளாளர் ஜெயங்கொண்டம் திரு. ராமநாதன் பிள்ளை அவர்களை அழைப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இணைச்செயலாளர் திரு. K. ராஜி அவர்கள் நன்றி உரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. செயலாளர் கார்காத்த சங்கம் காட்டுமன்னார்கோயில் ஒன்றியம்.

## குமராட்சி ஒன்றியம் :

சங்க ஆண்டு விழா **22–06–2025** அன்று ஒன்றிய சங்க கட்டிடத்தில் ஒன்றியத் தலைவர் திரு. A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. செயலர் திரு. S. இராமச்சந்திரன்

பிள்ளை, வரவேற்புரை ஆற்றிட, பொருளர் திருமதி. R. திலகம் ஆண்டறிக்கை வாசிக்க ஒன்றிய பிரதிநிதி G. ராஜேந்திரன் பிள்ளை வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார்.

விழாவில் பணி நிறைவு பெற்ற Prof திரு. T.S.S. ஞானகுமார் M.E., Ph.D., Prof. திரு. T.S.S. பாலகுமார் M.E., Ph.D., தலைமையாசிரியர் திரு. S. வரதராஜன், தலைமை ஆசிரியை P. பானுமதி, பட்டதாரி ஆசிரியர் திரு. R. இளஞ்செழியன், பட்டதாரி ஆசிரியை திருமதி. S. வடிவரசி, ஆசிரியை திருமதி. N. கண்ணகி திரு. R. திருமாவளவன் மேலாளர் CMS ஆகியோரையும், விருது பெற்ற முனைவர் திருமதி. S. இந்திராதேவி, முனைவர் திருமதி. C. சாந்தி மற்றும் பணி உயர்வு பெற்று வங்கி மேலாளராக பணிபுரியும் திருமதி. S. ஜெய் சுரேகா ஆகியோர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தலைமையாசிரியர் திரு. M.G. தியாகராஜன் அவர்கள் கார்குலஇளைஞர்களின் எதிர்காலம் என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அதிக மதிப்பெண்கள் பெற்ற எதிர்கால சிற்பிகள் எட்டுபேர் பாராட்டப்பட்டு ரொக்கப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இறுதியில் அதிஷ்ட குலுக்கல் நடத்தி மூவருக்கு பரிசு வழங்கப்பட்டது.

அடுத்த ஆண்டு முதல் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இறுதியாக துணைத்தலைவர் Prof. S. சிவக்குமார் பிள்ளை நன்றி உரைக்குப்பின் தேசிய கீதத்துடன் விழா நிறைவு பெற்றது.

- S. இராமச்சந்திரன்,

செயலாளர்.

**9486455841**

## சீர்காழி :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் **6–6–25** அன்று தலைவர் திரு. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சீர்காழி சட்டநாதர் ஆலயம் திருமுலைப்பால் உற்சவத்தை தொடர்ந்து வரும் தெப்ப திருவிழாவை சீர்காழி கார்காத்தார் சங்கம் இந்த ஆண்டு முதல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

புதிய உறுப்பினர் திரு. சுரேஷ் ஆயங்குடி பள்ளம் சங்கத்தில் சேர்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

பொருளாளர் திரு. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

**15–6–25** சீர்காழி சங்கத்தின் **21–**வது மங்கள சந்திப்பு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மகளிர் அணி குத்துவிளக்கு ஏற்றினார்கள். திரு. ராமலிங்கம், திரு. விழிநாதன் மற்றும் திரு. அகோரமூர்த்தி வரன்களை அறிமுகபடுத்தி நடத்தினார்கள். மங்கல சந்திப்பு நடத்த உதவிய அனைத்து உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

- C. அகோரம், செயலாளர்.

## மயிலாடுதுறை :

ஜுன் மாத செயற்குழு கூட்டம் **01–06–2025** அன்று சங்க கட்டடத்தில் மகளிரணி பொருளர் திருமதி. வசந்தி பன்னீர்செல்வம் அவர்களின் இறைவணக்கத்துடன் திரு. T. ரவிக்குமார் துணை தலைவர் வரவேற்புரைக்கு பின்னர் செயலர் அறிக்கையினைத் தொடர்ந்து பொருளர் திரு. N. முத்துக்குமாரசாமி அவர்கள் மாதாந்திர வரவு செலவு அறிக்கையினை தாக்கல் செய்தார். அப்பொழுது கல்வி நிதிக்கணக்கில் உள்ள தொகையினை வைப்பு நிதியாக மாற்ற வேண்டும் என சங்கத்தின் மூத்த உறுப்பினர் திரு. R. பாலசுப்பிரமணியன் அவர்கள் தனது சீரிய கருத்தாக தெரிவித்தார்கள். மேனாள் மாநில பொதுச்செயலர் திரு. M. சத்யபால் மாநில துணைத்தலைவர் திரு. S. சண்முகம் பிள்ளை திரு. S. வாஞ்சிநாதன் முன்னாள் பொறுப்பாளர்கள் தங்களது கருத்தை தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக மீண்டும் பேசிய திரு. S. வாஞ்சிநாதன் மற்றும் பல உறுப்பினரின் சிறப்பு பொதுக்குழு கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என தனது மேலான கருத்தாக தெரிவித்தார்கள். அடுத்து சங்கத்தின் துணை தலைவர் திரு. T. ரவிக்குமார் அவர்கள் சிறப்பு செயற்குழு கூட்டம் ஒன்றினை கூட்ட வேண்டும் என தெரிவித்தார்கள். மேற்கண்ட இரண்டு தீர்மானங்களும் செயற்குழு உறுப்பினர்களின் ஒருமித்த கைத்தட்டலுடன் ஏற்க்கப்பட்டது.

சிறப்பு செயற்குழு கூட்டம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

S. தில்லைநாயகம்,

செயலாளர்

## செம்பனார் கோயில் :

சங்க கூட்டம் 06–06–2025 அன்று நமது சங்க உறுப்பினர் திரு. வரதராஜன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் தலைமையில் வரதராஜன் அவர்களின் பேத்தி செல்வி. மேகலா இறைவணக்கம் பாடிட, கமலா வரதராஜன் அவர்கள் வரவேற்பும், சென்ற மாத கூட்டறிக்கை குரு. முத்துகுமார் பிள்ளை வாசித்திட வரவு செலவு கணக்கை சங்க பொருளாளர் திரு. ம.சி. செல்வராஜ் பிள்ளை அவர்கள் சமர்ப்பிக்க கூட்டம் இனிதே தொடங்கியது. சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் CREW TRUST மூலம் அளிக்கப்படும் கல்வி உதவிதொகைக்கான விண்ணப்பம் ஜுன் மாத "ஒப்புரவு இதழில் வர உள்ளது என்றும், கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். மேலும் பேசுகையில் திருமதி. ரெத்தினாவதி அவர்கள் சைவ சித்தாந்த வகுப்பில் கலந்து கொண்டு சிறப்பித்தமைக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள்.

மேலும் நமது சங்க நகைச்சுவை மன்னன் திரு. மதியழகன் அனைவருக்கும் நகைச்சுவை கூறி மகிழ்வித்தார்கள். மேலும் திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் "பேசுவது" என்ற தலைப்பை கொண்டு குடும்பத்தில், பொது இடத்தில், அலுவலகத்தில் நண்பர்களிடத்தில் பேசும் விதம், பொறுத்திருந்து பேச வேண்டும் என்றும் முக்கியமாக மொழி அறிந்து பேச வேண்டும். நமது தலைவர்கள் அனைவரும் சிறந்த பேச்சாளராக இருந்துள்ளார்கள் என்றும் கூறினார்கள். திருமதி. K. ரெத்தினாவதி அவர்கள் தருமபுரம் ஆதீனத்தால் 09–05–2025 – 18–05–2025 வரை நடைபெற்ற சைவசித்தானத்தில் கலந்து கொண்ட அனுபவங்களை சங்கத்தில் பகிர்ந்து கொண்டார்கள்.

மேலும் சங்க மூத்த உறுப்பினர் திரு. கணபதி நடனம் பிள்ளை அவர்கள் கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார்க்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள். திரு. A.M. சேகர் பிள்ளை அவர்கள் "பேசுவது" எப்படி என்று விளக்கமாக கூறியதை மேற்கொள்காட்டி அவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்து கொண்டார்கள்.

சங்கத்தின் சார்பாக கூட்டம் ஏற்று நடத்திய தம்பதியர்க்கு சிறப்பு செய்யப்பட்டது. நமது சங்க உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் நன்றி கூற கூட்டம் சிறப்பாக முடிவுற்றது.

– கி. இராமநாதன்,
தலைவர்.

## பரசலூர் :

01–6–25 அன்று கூட்டம் நக்கீரர் தெரு பாரதிதாசன் இல்லத்தில் K. ஜெயஸ்ரீ இறைவணக்கம் பாட விக்னேஷ் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ. கண்ணன் சென்ற மாத மாதாந்திர அறிக்கை மற்றும் மாத நிதிய அறிக்கையையும் தலைவர் க. கோவிந்தராஜன் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசித்தார். நிதிய சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க உறுப்பினர் G.S. பாண்டியன் மகன் திருமணத்திற்கும், கண்ணதாசன் புதுமனை புகுவிழாவிற்கும் சங்க பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும் பெருமளவில் கலந்துகொண்டு பரிசு பொருட்களை வழங்கினார்கள்.

கார்குல கொடைவள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களின் 80–வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு சங்கத்தின் சார்பில் தருமபுரம் ஆதீனம் ஸ்ரீவிரட்டேஸ்வரர் ஆலயத்தில் சங்கத்தின் சார்பில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு, காரம், காப்பி வழங்கப்பட்டது.

சிறப்பு குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு திரு. வீ. கண்ணனுக்கு பாரதிதாசன் வழங்கினார்.

கூட்டம் நடத்திய திரு. பாரதிதாசன் இல்லத்தாருக்கு N. சிவக்குமார் பிள்ளை, வீ. கண்ணன் பிள்ளை சால்வை அணிவித்தனர்.

திரு. செந்தில்குமார் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

– வீ. கண்ணன்.
Cell : 9894960438

## மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 08–06–25 அன்று சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு தலைவர் திரு. G. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. சங்க முன்னாள் தலைவர் திரு. M. சிங்காரவேலன் சிவபுராணம் வாசிக்கவும், செயலர் திரு. T. கபிலன் சென்ற மாத அறிக்கையை வாசிக்கவும், பொருளர் திரு. S. பரமநாதன் வரவு – செலவு கணக்குகளை படித்து உறுப்பினர்களின் ஒப்புதல் பெறப்பட்டது.

நமது வாரிசுகளுக்கு விவசாய நாடான நம் நாட்டில் உள்ள விவசாயிகள் பற்றிய விழிப்புணர்வும்,

மரம் நடுதலின் முக்கியத்துவத்தையும் குறித்து குழந்தைகளுக்கு புரிய வைப்பதும் அதன் அவசியத்தை தலைவர் எடுத்து கூறினார். கார்குல வள்ளல் திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் அகவை 80 காணும் வள்ளல் நீடுழி வாழ வேண்டும் என தீர்மானம் இயற்றப்பட்டது. மணிக்கிராமம் மேலத்தெருவை சார்ந்த திரு. A. துரை, A. இளங்கோவன், A. முருகன் மற்றும் அப்புச்சி என்கிற சுரேஷ் ஆகியோரின் தாயார் இராஜாமணி அம்மாள் இயற்கை எய்தினதிற்கு இரு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் நன்றி கூற கூட்டம் இனிதே முடிந்தது.

– கோ. அன்பழகன், தலைவர்.

## 80. இராதாநல்லூர் :

சங்க கூட்டம் 8–6–2025 அன்று தலைவர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க செயலர் திரு. இரா. மு.அ. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 1) ஜுன் மாதத்தில் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 2) நமது சங்க செயற்குழு உறுப்பினர் திரு. அ. சண்முகநாதன் – திருமதி. பா. ஜெயஸ்ரீ ஆகியோரின் புதல்வி ச. ஸ்ரீ. உமாபார்வதி என்ற மாணவி மார்ச் 2025–ல் நடைபெற்ற 10–ம் வகுப்பு பொதுத் தேர்வில் 500 க்கு 495 மதிப்பெண்கள் பெற்று பள்ளியில் முதல் மாணவியாகவும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 2–ம் இடத்தையும் பெற்று பள்ளிக்கும் பெற்றோர்களுக்கும் நற்பெயரை பெற்று தந்துள்ளார். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அவர்களால் பாராட்டு விழா நடத்தப்பட்டு சிறப்பை பெற்றுள்ளார். நமது சங்கம் மேற்படி மாணவிக்கு இனிப்பு வழங்கி வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தது. உயர் கல்வியில் மேலும் மேலும் சிறப்பிடம் பெற வாழ்த்தி மகிழ்கிறது. 3) நமது சங்க இணைச்செயலர் காதி. S.G. சந்தோஷ்குமார் – திருமதி. ஐஸ்வரியா தம்பதியரின் புதல்விகள் மகிழினி மற்றும் யாழினி ஆகியோருக்கு 28–5–2025 அன்று மயிலாடுதுறை கார்காத்தார் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற திருவிளக்கீடு விழாவிற்கு நமது சங்க பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு வாழ்த்தியமைக்கும் சிறப்பித்தமைக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. 4) சங்க பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

- T. முத்துக்குமரசாமி, தலைவர்.

9443645646

## பூம்புகார் - மேலையூர் :

மூத்த உறுப்பினர் திரு. ஞானபிரகாசம் அவர்களும் இளைய உறுப்பினர் செல்வன் நித்திஷ் அவர்களும் இறைவணக்கம் பாட கூட்டம் இனிதே நடைபெற்றது.

15–5–2025 அன்று ஆன்மீக சுற்றுலா சென்று வந்தது பற்றி பல்வேறு கருத்துகள் பரிமாறபட்டன.

CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவிதொகை பெறும் மாணவர்கள் ஜுன் மாதம் 15–ஆம் தேதிக்கு மேல் அனுப்பலாம் என்று எடுத்துரைக்கப்பட்டது.

நமது சங்க உறுப்பினர் திரு. B. சிவநேசன் அவர்களை அமைப்பு செயலாளராக அனைத்து உறுப்பினர்களாள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கபட்டார்.

நமது மகளிர் அணி உறுப்பினர் திருமதி. B. தனுஜா அவர்கள் ஜுன் 2–ஆம் தேதி பள்ளி திறப்பு விழா பற்றியும் மாணவர்கள் முன்னேற்றம் பற்றியும் மற்றும் மகளிர் அணி செயல்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

இறுதியில் பொருளாளர் திரு. R. வெங்கடேசன் அவர்கள் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- G. விஜயராகவன்,

செயலாளர்.

Cell : 9994635306

## நெடுங்காடு :

சங்க கூட்டம் 12–6–25 அன்று காரைக்கால் S. மணிகண்டன் இல்லத்தில் திரு. புலவர் ராஜேஷ்வரன் அவர்கள் இறைவணக்கம் பாட தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மண்டல செயலாளர் முன்னிலையில் நடைபெற்றது.

வடமட்டம் : திரு. ராமலிங்கம் பிள்ளை அவர்களின் மனைவி பானுமதி அவர்கள் மறைவிற்கு 1 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது திரு. K.V. விஜயா அவர்களின் மகன் பிரகாஷ்ராம் அவர்கள் இரண்டாவது முறையாக ரூ. 10,000/– கொடுத்துள்ளார்கள். கல்வி நிதிக்காக அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

மெய்கண்டார் அறக்கட்டளைக்கு பஞ்சாங்கம் கொடுக்கும் போது ரூ. 100/– வசூல் செய்ய வேண்டும் என்றும் மெய்கண்டார் அறக்கட்டளைக்கு சங்க சார்பாக வருடத்திற்கு ரூ. 3000/– கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது.

திரு. K. செல்வம் அவர்களுக்கு குடும்ப நல நிதியாக ரூ. 50,000 வழங்கிய மாநில சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கும்பகோணத்தில் நடைபெற்ற மகளிர் சங்கம் ஆலோசனைக் கூட்டம் தொடர்பாக விவரங்களை மகளிர் அணி செயலாளர் திருமதி. அபூர்வம் நமச்சிவாயம் விளக்கினார்.

திரு. மணிகண்டன் அவர்கள் சஷ்டியப்தபூர்த்தி முடிந்ததற்கு நன்றி தெரிவித்து கல்வி நிதிக்கு ரூ. 5000/– கொடுத்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

**பரிசுக் குலுக்கல் :**

I - T. P. சிவக்குமார் – மாத்தூர், II - K.S. கணபதி சுப்பரமணியன் – வரிச்சிக்குடி, III - S. கோபு – காரைக்கால்

– S. ரெங்கநாதன்,
செயலாளர்.

## திருவாரூர் :

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 7–6–2025 அன்று ராஜன் கட்டளை அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்க துணைத்தலைவர் திரு. M. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் தலைமையிலும் திரு. கண்ணபிரான் பிள்ளை முன்னின்றும் நடத்தி வைத்தார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் திருமுறை பாடல்களை கடவுள் வணக்கமாக பாடினார்கள்.

தலைவர் உரையில் மாநில சங்க நிகழ்வுகளை பற்றி கூறினார்கள். செயலாளர் சோமசுந்தரம் அவர்கள் ஆன்மீக உரையில் கமலை ஞானப்பிரகாஷ் செய்த அற்புதங்களை ஒரு சிலவற்றை கூறினார்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிற்றுண்டி தேநீர் வழங்கினார்கள். கூட்ட முடிவாக திரு. பொன்னுசாமி அவர்கள் நன்றி கூறினார்கள்.

– அ. சோமசுந்தரம்.

## கும்பகோணம் :

சங்கம் கூட்டம் 22–6–2025 அன்று கோடையான் தோட்டம். திரு. ராஜாராமன் அவர்கள் இல்லத்தில் தலைவர் டி.எம். வைத்தியநாதன் தலைமையில் துணைத்தலைவர் பாலகுரு அவர்கள் முன்னிலையில்நடைபெற்றது. திரு.ராஜாராம் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடி வரவேற்புரை ஆற்றினார்கள். தலைமையுரைக்குப்பின் கார்குல கலாசார சங்கமம் பற்றிய கலந்துரைபாடல் நடைபெற்றது. கூட்ட முடிவில் பொருளாளர் ஏ.எஸ். பழனி அவர்கள் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கார்குல வள்ளல் கார்குல ரத்னா திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களின் எண்பதாவது பிறந்த நாள் முன்னிட்டு அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டு நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியத்துடன் வாழ இறைவனை பிரார்த்தித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிர்வாகத்திற்கு துணை புரிய இணை தலைவராக திரு. கொண்டங்குடி எம். சந்திரமோகன் அவர்களையும் இணைச்செயலாளராக எம்.சாமிநாதன் அவர்களையும் இணைபொருளாளராக டி.எஸ். சூரியநாராயணன் அவர்களையும் செயற்குழு உறுப்பினராக ஆர். மகேந்திரன் அவர்களையும் செயற்குழுவில் ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டு பொதுக்குழுவில் அனுமதி வாங்கிக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது.

10–08–2025 அன்று நடைபெறவுள்ள கார்குல கலாச்சார சங்கமம் மகளிர் மாநாட்டிற்கு முழு ஒத்துழைப்பு அளிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

இரங்கல் தீர்மானம்

கும்பகோணம் வர்த்தகத்தில் கார் குலத்தின் அடையாளமாக திகழ்ந்த சாமு குரூப்ஸ் எஸ். கும்பலிங்கம் அவர்கள் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

- S. விஜயகுமார்,
செயலாளர்.

## தஞ்சாவூர்

சங்க நிர்வாக குழுக்கூட்டம் 20–06–2025 அன்று சங்க தலைவர் திரு. S. ஜெயச்சந்திரன் தலைமையில் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. துணைத்தலைவர் S. மோகன்குமார் முன்னிலை வகிக்க செயலாளர் திரு. S. மதியழகன் சென்ற கூட்ட நடவடிக்கை அறிக்கை வாசித்தார்.

20–06–2025–ல் அகவை 80 காணும் கார்குல வள்ளல் திரு. ச. வெங்கடேசன் பிள்ளை திருமதி. ஞானாம்பிகை தம்பதியரை சங்கத்தின் சார்பாக வெகுவாக பாராட்டி எல்லா வளமும் நலமும் ஐஸ்வரியமும் நீண்ட ஆயுளும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

திரு. D. சுகுமார் அவர்களது மனைவி திருமதி. S. கீத்தா புள்ளியியல் துறை அதிகாரியாக பணிபுரிந்து 30–04–25 பணி ஓய்வு பெற்றுள்ளார். மற்றும் சங்க உறுப்பினர் திரு. B. விவேகானந்தன் திருமதி. ஜோதிவிவேகானந்தன் குமாரர் V. நந்தகுமார் Weds S. சுவாதிபிரியா திருமண வரவேற்பு 18–05–2025 தஞ்சை Lions Club-ல் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

கார்குல கலாச்சார விழா சங்க போட்டிகள் வரும் 10–08–2025 நடைபெறும் நிகழ்வு பற்றி கலந்து ஆலோசிக்கப்பட்டது. சங்க கூட்டத்தில் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். திரு. R. சண்முகம் பொருளாளர் நன்றி தெரிவித்தும், நிர்வாகக் குழு உறுப்பினர்களுககு சிற்றுண்டி வழங்கிய திரு. S. ஜெயச்சந்திரன் தலைவர் மற்றும் திருமதி. மலர்விழி ஜெயச்சந்திரன் அவர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்ள கூட்டம் இனிதே முடிவுற்றது.

- S. ஜெயச்சந்திரன்,

தலைவர்.

## மதுரை :

8–6–2025 அன்று செயற்குழு கூட்டம் நடைபெற்றது. சங்க தலைவர் முனைவர். K. சிவசுப்ரமணியம் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மாநில துணைத்தலைவர் S. உமையொருபாகம் மற்றும் மகளிர் அணி தலைவர் U. குமாரிலெட்சுமி மகளிரணி துணைதலைவர் M. ஜான்ஸிராணி செயற்குழு உறுப்பினர் S. மாணிக்கவாசகம் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நமது சங்க மூத்த உறுப்பினர் அழகப்பன் நகர், சேதுராஜன் பிள்ளை, அவர்களின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் குடந்தையில் நடைபெறும் கார்குல மகளிரின் கலாச்சார விழா போட்டிகள் கலந்து கொள்வது சம்பந்தமாக ஆலோசனைகள் வழங்கப்பட்டது. சங்க பொருளாளர் வழக்கறிஞர் S. முருகன் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

- B. ரவிச்சந்திரன்,

செயலாளர்.

## ஈரோடு :

சங்க 6–வது ஆண்டு விழா, பூந்துறை ரோட்டில் உள்ள NR திருமண மஹாலில் 22–06–25 அன்று துவங்கியது. மகளிரணியினர் குத்துவிளக்கு ஏற்றி விழா துவங்கியது. செல்வி. மஹிபாஸ்ரீ இறைவணக்கம் பாடினார். திருமதி. தேன்மொழி முருகானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவிற்கு ச. பூபதி மண்டல செயலாளர், திரு. V.M. ஜெயபாலன் துணைத்தலைவர் முன்னிலை வகித்தார்கள். திரு. அ. தேவேந்திரன் தலைமை உரை நிகழ்த்தினார். திரு. அ. மதியழகன் மாவட்ட செயலாளர் செயல் அறிக்கையினை தாக்கல் செய்தார். பொருளர் திரு. R. ராம்குமார் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்தார். திருச்சி மாவட்ட மகளிரணி தலைவி திருமதி. சரஸ்வதி பாலசுப்ரமணியன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். மாவட்ட இணைச்செயலாளர் D. குமார் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மாநில பொது செயலாளர் திரு. M. பாலசுப்ரமணியன் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை நிகழ்த்தினார். சங்கம் சார்பாக பள்ளிகளில் படிக்கும் 10 மாணவ / மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. இறுதியாக EA சுதாகரன் நன்றியுரை கூறினார். மதிய உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டது. 110 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். 2 மணியளவில் விழா இனிதே நிறைவு பெற்றது.

– அ. மதியழகன்,

மாவட்ட செயலாளர்.

## கோவை :

சங்கத்தின் மாதாந்திர கூட்டம் 22–06–2025 அன்று வழக்கறிஞர் திரு. தி. மகராஜன் அவர்களது இல்லத்தில் மிக சிறப்பாக நடைபெற்றது.

திருமதி. ஞானகுமாரி ஞானசம்பந்தம் மற்றும் செல்வி. சோ. வ. ரம்யஸ்ரீ ஆகியோரின் இறைவணக்கத்துடன் இனிதே ஆரம்பமாகியது. புதிய உறுப்பினர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். 20–06–2025 அன்று பிறந்தநாள் கொண்டாடிய சதாபிஷேக தம்பதிகள், நமது கார்குல கொடைவள்ளல் திரு. ச. வெங்கடேசன் பிள்ளை – திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன் தம்பதியினரை வாழ்த்தி பாராட்டுரைகள் வழங்கப்பட்டன.

கோவை சங்க உறுப்பினர்களின் முகவரிகளை சரிபார்த்து சீர்படுத்தி புதிய முகவரி கையேடு தயார் செய்து வரும் ஆகஸ்ட் மாதம் நடத்த திட்டமிட்டிருக்கும் ஆண்டு விழாவில் வெளியிட உத்தேசிக்கப்பட்டது.

திரு. ஞானசம்பந்தம் மற்றும் திரு. மகராஜன் தம்பதியினர் பலவிதமான சிற்றுண்டி வகைகளை அனைவருக்கும் தாராளமாக பரிமாறி மகிழ்வித்தனர். இறுதியில் சங்கப் பொருளாளர் திரு. இரா. சிவராஜகோபால் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

கோவைப்புதூரின் குளிர்ந்த காலநிலை, நிறைவான சிற்றுண்டி, நம் இனத்தினருடனான மகிழ்வான அளவலாவுதல் யாவும் சேர்ந்து ஒரு பொன்மாலைப் பொழுதாக அமைந்தது என்பதை சொல்லவும் வேண்டுமா!!

- S. வள்ளிநாயகம்,

செயலாளர்.

## வருந்துகிறோம்

சீர்காழி தாலுக்கா, கோவிந்தன் நகர் தென்பாதி திரு. ரமேஷ் அவர்களின் தாயார் திருமதி. பானுமதி அம்மாள் 25–5–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும்

சீர்காழி, தென்பாதி VNP நகர் கதிரேசன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோரின் தாயார் திருமதி. சரோஜா அவர்கள் 18–5–25 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் சீர்காழி சங்கம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- ❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- ❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- ❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- ❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- ❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

*அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு**,*
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*- கார்காத்தார் ஒப்புரவு*

## *தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்*

தங்கம் செய்யாததை சங்கம் செய்யும். யார் இந்த சங்க இயக்க வாதிகள் என்று பார்ப்போம்.அவர்கள் அந்நியர்கள் அல்ல. நம்மில் கலந்தவர்கள். நம் உறவுகள்.

சங்க நிர்வாகிகள் பெரும்பான்மையோர் மரியாதைக்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள். தங்களின் சொந்த பணிகளுக்கு இடையே சக உறவுகளின் நலன்களுக்காக தங்கள் நேரத்தையும், உழைப்பையும் செலவு

செய்பவர்கள். அதிலும் சிலர் சரியாக குடும்பத்தைக் கூட கவனிக்காமல் சங்க பணிகளுக்காக விடிய விடிய பயணம் செய்வதிலும், கூட்டங்களில் கலந்து கொள்வதிலும், தபால் அனுப்புவது, கூட்டங்களை ஒருங்கிணைப்பது போன்ற பணிகளில் உணவையும் மறந்து மூழ்கிப் போவார்கள்.

ஆனால் அவர்களின் அருமை, முக்கியத்துவம் நம்மில் பலருக்கு தெரியாது. முழு நேரமோ பகுதி நேரமோ சங்க பணிகளை சொந்த வேலையாக எடுத்து பணி புரிவோர் அனைத்து பகுதியிலும் இருக்கின்றார்கள்.

நம் சொந்தங்கள் பணி புரியும் அலுவலகம் மற்றும் வீடு வீடாக சென்றுஉறுப்பினர் சந்தாமற்றும்நன்கொடைகள் கேட்போம். "கார் காத்தார் ஒப்புரவு" க்கு சந்தா கேட்போம். இதுவரை சங்கத்தில் சேராத உறவுகளை புதியதாக உறுப்பினராக சேர வலியுறுத்துவோம். எதிராக வரும் கருத்துக்களையும், கேள்வி கணை களையும் கூர்மையாக, சகிப்பு தன்மையோடு பொறுமையாக உள்வாங்கிக் கொள்வோம். நம் நடவடிக்கைகளை விமர்சனம் செய்வோர் பற்றி ஆரோக்கியமாக, பொறுமையோடு விவாதித்து எடுத்து சொல்வோம். தனிநபர் விமர்சனம் தவிர்த்து கொள்கை அடிப்படையை ஆணித்தரமாக பேசுவோம். சிலர் அதை ரசிக்க மாட்டார்கள்.மற்றும் சிலர் பணம் கேட்க வந்து விட்டார்கள், இவர் களுக்கு வேற வேலையே இல்லை என்று மனதிற்குள் சலித்து கொள்வார்கள். சிலர் சாதி சங்கத்தில் சேர மாட்டேன் என்று கொள்கை பேசுவார்கள். சிலர் பழைய சம்பவங்களை சொல்லி அப்போது சங்கம் எங்கே போயிற்று என்று கேள்வியும் கேட்பார்கள்.

ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு கல்வி உதவி வேண்டும், வேலை வேண்டும், திருமணம் செய்ய நல்ல வரன்கள் வேண்டும், மருத்துவ உதவி வேண்டும் என்ற நேரத்தில் மட்டும் ஓடி வருவார்கள்.

மற்ற நேரங்களில் தாங்கள் மிக பிசியாக இருப்பது போல பாவனை செய்வார்கள்.

சிலர் "நான் கூட்டங்களுக்கு வருவதில்லை சங்கம் எனக்கு எதுவும் செய்ய வில்லை" என்று சம்பந்தமில்லாமல் பேசி சந்தா கொடுப்பதை தவிர்ப்பார்கள். இன்னும் சிலர் சங்கம் தங்களின் சொந்த பிரச்சனையை கூட பெரிய பிரச்சனையாக கருதி தீர்க்க வரவில்லை என்பார்கள்.

இது போல உறவுகள் மனநிலை மற்றும் உளவியலை கற்று, அனுபவமும் பயிற்சியும் பெற எனக்கு தொழிற்சங்கம் வாய்ப்பு

அளித்தது.அதை பெரிய பலமாகவும், வரமாகவும் நான் கருதுகிறேன்.

ஆம்...மாதம் கைநிறைய சம்பாதிக்கும் சங்க பொறுப்பாளர்கள் உங்களை

தேடி பணம் பெறவேண்டிய அவசியம் என்ன?

அவர்களுக்கு அதிலென்ன ஆதாயம்? ஒரு நாளாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? இதற்கான பதில் இருக்கிறது.

எப்போதும் தன்னுடைய பங்களிப்பு இல்லாமல் ஒரு நிகழ்வு நடந்தால் அதில் ஆர்வமோ, அக்கறையோ, ஈடுபாடோ, இருக்காது. இது அடிப்படை மானிட உளவியல் கருத்து. தான் கொடுக்கும் சிறு தொகை கூட பெரிய கவனத்தை ஈர்த்திட செய்யும். அனைவரையும் ஒருங்கிணைத்து தேவை உள்ளவர்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் ஆதரவற்ற நமது உறவு முதியோர்களை ஆதரவு அளிப்பது, முதியோர் இல்லங்களில் சேர்ப்பது, பராமரிப்பது போன்ற பல்வேறு உதவிகளையும், இனம் சார்ந்த போராட்டங்களை நடத்துவது என்பது நம் பணி. அதுவே இயற்கையின் கொள்கை.அதற்கு உங்களை ஈடு படுத்துவதற்காகவே இந்த சந்தா,சங்கம் எல்லாம்.சிறு துளி பெரு வெள்ளம் என்று மூத்தோர் சொல்லி வைத்துதான்.

வனங்களில் மேயும் மாடுகள் ஒன்றாக மேயும் போது சிங்கம் அருகில் வராமல் தோற்று ஓடும். ஆனால் பிரிந்து தனியாக மேய்ந்தால் உயிர் தப்புமா? அரசு மற்றும் பெரும்பான்மை இன மக்கள் அதிகாரம் நம் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான ஆயுதம். மதிப்பெண்கள் பெற்றும் அரசு வேலை கிடைப்பது இல்லை.நம் நேர்மையால் அதிகாரம் நம் கைக்கு வருவது இல்லை.

அரசு நம் இனத்தை முற்பட்ட இனம் என்று வரையறுத்து இருக்கிறது.பத்து தலைமுறைக்கு முன்பு சுகமாக, கல்வி அறிவோடும் செல்வத்துடன் செல்வாக்குடன் இருந்தோம் என்று சொல்லி இன்று நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான சலுகைகளை மறுப்பது என்ன சமூக நீதி? நமக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வுரிமை கூட மறுக்கப்பட்டது என்பதை நம் குல வழக்கறிஞர் திரு.மு.ஆ. விஜயன் வழக்கில் பார்த்தோம்.

நம் ஒற்றுமையை குலைப்பது என்பதும் ஒரு வகை அரசியல்தான்.ஒற்றுமையில்லாத இனம் மற்ற பெரும்பான்மை இனங்களின் முயற்சிகளால் சிதறடிக்கப்படும். இதற்காகத் தான் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க நம் உரிமைகளை வென்றெடுக்க 100 ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்களால் நமது சங்கங்கள் பல இடங்களில் தோற்றுவிக்கப் பட்டன. இந்த காரணம் அல்லாமல் உறுப்பினர் சந்தா பெறவோ, நன்கொடைகள் பெறவோ அல்ல!!சென்னையிலும், திருநெல்வேலியிலும், மும் மாவட்டத்திலும் சங்கம் நடத்தியவர்கள் சந்தாவை எதிர் பார்த்தா நடத்தினார்கள்? அவர்கள் எத்தனை பேர் குடும்பத்தில் விளக்கு ஏற்றி வைத்தார்கள்..

மாதம் ரூ. 500/– கொடுத்து நாளிதழ்கள் வாங்குபவர்கள்,ஆண்டுக்கு ரூ. 300/– கொடுத்து நம் இன இதழான "கார் காத்தார் ஒப்புரவு" இதழுக்கு சந்தாதாரர் ஆக வெகுவாக யோசிப்பார்கள். காரணம், எதை பற்றியும் கவலை படாமல் வசதி வாய்ப்புடன் வாழ்கின்ற நுகர்வுக் கலாச்சாரமாக இருக்கலாம். அவர்களே வாரிசுகளுக்கு வரன் தேடும்போது ஒப்புரவையும்
சங்கங்களையும், மங்கல சந்திப்புகளையும் தேடி ஓடி வருவதையும் தங்கள் காரியம் முடிந்த பின் ஒப்புரவு சந்தாவை நிறுத்தி விடுவதையும் பார்க்கிறோம்.

நல்ல மனம் படைத்த உறவுகளிடம் ஸ்பான்சர் பெற்று சங்கம் நடத்தி விடலாம் தான். ஆனால் யாருக்காக நடத்துகிறோம் என்கிற போது உணர்வுகள் வற்றிப் போகும்.உறவுகளின் ஆதரவு மற்றும் ஈடுபாடு இல்லாவிட்டால் சங்கங்கள் வருங்காலத்தில் கண்டிப்பாக அழிவை நோக்கி செல்ல நேரிடும்.
பின்பு நாம் ஏது, நம் இனம் ஏது???
சங்க நிர்வாகிகள் மற்றும் தலைவர்கள் வசதி இல்லாதவர்களோ அல்லது சங்க பணத்தை கொள்ளை அடிப்பவர்களோ அல்ல. உங்களால் அவர்கள் வாழ்க்கை நடத்துபவர்கள் அல்ல என்பதை உணருங்கள்!!

இன்றைய காலகட்டத்தில் சாதி பிரிவினை என்பது அரசியலிலும் நிர்வாகத்திலும் நமது வாழ்விலும் கண்டிப்பாக பல மாற்றங்களை ஏற்படுத்துகிறது அதுவும் முற்பட்ட இனம் என்று நம்மை வைத்திருக்கின்ற காரணத்தினால் நாம் எல்லோருக்கும் இணையாக வரி கட்டினாலும் நமக்கு சலுகைகள் வழங்கப் படுவதும் சமூக நீதி தான் என்பதை எடுத்து சொல்ல ஒரு சங்கம் கண்டிப்பாக தேவைப்படுகிறது.

எனவே சங்கத்தில் சேருங்கள். சங்கத்திற்கு உறுப்பினர் சந்தாவை கொடுங்கள்!!!
பின்னர் உங்களின் எந்த பிரச்சனையையும் பொறுமையாக மனம் திறந்து அன்புடன் பேசுங்கள்!!!
தீர்வுக் கான வழிகளை இணைந்து கண்டுபிடிப்போம்!!!

இயக்கங்களில் பங்கேற்க நேரம் ஒதுக்குங்கள்!!! நிர்வாகிகளுக்கு உற்சாக மனநிலை என்பது பணத்தால் வராது. ஒன்று கூடினால் உங்கள் ஆதரவு என்பதால் வரும்.

நம் வாழ்வில் கல்வி, வேலை, திருமணம், தொழில் இவைகளில் நிச்சயமாக சங்கம் ஏதோ ஒரு வழியில் உங்களோடு இரண்டற கலந்திருக்கும்.
நம் முன்னோர்களின் எண்ணற்ற தியாகத்தை மறந்திடவோ, மறைத்திடவோ முடியாது.

முடிந்தால் ஒரே ஒரு ஆண்டு மட்டும் சங்க நிர்வாகியாக இருந்து நம் உறவுகளின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண களத்தில் இறங்கி பாருங்கள்.பிறகு எப்போதும் நீங்கள் சங்கத்தை மறக்க மாட்டீர்கள்.

இந்த நீண்ட பதிவை சேவையாற்றும்,நம் சங்க உறவுகளுக்கு கனிவோடு சமர்ப்பிக்கின்றோம்.

மீண்டும் சொல்கிறோம்*தங்கம் செய்யாததை சங்கம் செய்யும்....*

நன்றி !!!

மு.பாலசுப்ரமணியன்
பொது செயலாளர்
தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு.

## ஜன நாயகத்தின் தூண்கள்
## PILLARS OF DEMOCRACY

### நீதி மன்றங்கள்

நீதித்துறையில் நீதி மன்றங்கள் சுதந்திரமாகச் செயல்படுபவைகளாகும். நீதி மன்றங்களின் நீதித் துறை பற்றிய பணிகளில் நிர்வாகத் துறையோ அல்லது சட்டமன்றமோ தலையிடாது. உச்ச நீதி மன்றத்துக்கும் உயர் நீதி மன்றங்களுக்கும் தீர்ப்பினை மறு ஆய்வு செய்யும் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன., நாடாளுமன்றமோ அல்லது மாநில சட்ட மன்றங்களோ நிறைவேற்றிய சட்டங்கள் சட்ட விரோதமானது அல்லது அரசியல் சாஸனத்துக்கு எதிரானது என்று அறிவிக்க நீதி மன்றங்களுக்கு அதிகாரம் உள்ளது.

### அரசியல் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு

மேலே சொல்லப்பட்ட அதிகாரப் பகிர்வுகளைக் கருத்தில் கொள்ளும் சட்ட வல்லுநர்கள், நமது நாட்டில் அதிகாரப் பகிர்வு அல்லது பிரித்தல் என்ற கோட்பாடு நமது அரசியல் சாஸனத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதன் அடிப்படைத் தளம் என நம்புகின்றனர் அரசியல் சாஸனத்தின் விதி முறைகள் அதிகாரப் பகிர்வு எண்ணும் கோட்பாடு உறுதியாக அனைத்து விஷயங்களிலும் பின்பற்றப்படவேண்டும் என்று கூறப்பட வில்லை

இந்திய அரசியல் சாஸனப் பிரிவுகள் 53 1 10 மற்றும் 154 1 11 இவற்றின் கீழ் இந்திய யூனியனின் மற்றும் இந்திய மாநிலங்களின் நிர்வாக அதிகாரங்கள் முறையே இந்தியக் குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர்கள் வசம் வரும் என்ற போதிலும் இந்திய அரசியல் சட்டத்தில் அரசுகளின் செயல்பாடுகளில் பிரிவு பற்றி ஏதும் கூறப்படவில்லை

### அதிகாரப் பகிர்வு பற்றி உச்ச நீதி மன்றக் கருத்து

இவ்வாறு அதிகாரத்தைப் பகிர்தல் என்ற கோட்பாடு இந்திய அரசியல் சாஸனத்தால் முழுமையாக ஒப்புக் கொள்ளப்பட வில்லை என்பது தெளிவாகிறது அதனால் ராம் தேவ்பாபாவுக்கும் பஞ்சாப் மாநிலத்துக்கும் இடையே நடந்த வழக்கில் நீதியரசர் முகர்ஜி அவர்கள் , " இந்திய அரசியல் சாஸனம் அதிகாரப் பகிர்வு என்பதனை முழுமையாக ஏற்றுக் கொள்ள வில்லை ஆனால் அரசின் பல பிரிவுகளின் செயல் பாடுகள் போதுமான அளவிற்கு வேறு படுத்தப்பட்டுள்ளன என்றும் நாம் நம்முடைய பல துறைகளிடையே செயல் பாடுகளைப் பிரித்துக் கொள்கிறோமே ஒழிய அதிகாரங்களைப் பிரித்துக் கொள்ள வில்லை என்றும் கருத்து கூறியுள்ளது.

### நாடாளுமன்றப் பணிகள்

இவ்வாறாக நாடாளுமன்றம் புதிய சட்டங்களை எழுதி உருவாக்குவதுடன், வரிகளை விதிக்கிறது, அரசு கடன் வாங்குவதற்கு அதிகாரம் அளிக்கிறது அரசின் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நிர்ணயிக்கிறது , தேவைப் பட்டால் இதர நாடுகளுடன் போர் அறிவிக்கிறது, புலன் விசாரணையைத் துவங்குகிறது குறிப்பாக நிர்வாகப் பிரிவின் மீது அதே போல் நிர்வாகப் பிரிவுக்கான தலைமையை நியமனம் செய்கிறது, நீதிபதிகளை நியமனம் செய்கிறது , அரசு செய்துள்ள ஒப்பந்தங்களைப் பின்னேற்பு செய்கிறது.

### நீதித் துறை நீதி மன்றங்கள் பணிகள்

ஒரு குறிப்பிட்ட வழக்கு அல்லது செயலுக்கு எந்த சட்டம் பொருந்தும் என்பதை நீதி மன்றங்கள் நிர்ணயிக்கின்றன, நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஒரு சட்டம் அரசியல் சாஸனத்துக்கு எதிரானதா என்பதை நீதித் துறை நிர்ணயிக்கிறது குறிப் பிட்ட ஒரு சட்டத்தை விளக்கி சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு அச் சட்டம் பொருந்துமா என்பதை நிர்ணயிக்கிறது ஏதேனும் சட்டம் முக்கியமான வேறு சட்டத்துக்கோ அல்லது அரசியல் சாஸனத்துக்கோ முரண்பாடாக இருந்தால் அந்த குறிப்பிட்ட சட்டத்தை செல்லாதது ஆக்கிவிடுகிறது, சிறைக் கைதிகளின் நிலையை நிர்ணயிக் கிறது சாட்சியம் கூறவும் சாட்சியங்களை அளிக்க வற்புறுத்தவும் நீதி மன்றத்துக்கு அதிகாரம் உள்ளது.

அரசின் ஒவ்வொரு அங்கமான பிரிவுகளும் தங்களுக்குரிய பணிகளைச் செய்து கொண்டிருக்கும்போது அவை மற்ற பிரிவுகளின் பணிகளில் தலையிடுவது போல் தோன்றும். ஏனென்றால் ஒவ்வொரு துறையும் பிரிவுகளும் பொது மக்களுடன் கலந்து பழகும்போது அவற்றுக்கிடையே சரியான வரையறை செய்வது மிகக் கடினம் ஆகும்

ஜன நாயகத்தின் தூண்கள் பற்றி ஏதும் அறியாதவர்கள் ஓரளவு தெரிந்து கொள்வதற் காக எழுதப் பட்ட கட்டுரை. மேற்கொண்டு விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட சட்டம் அரசியல் சட்டம் மற்றும் வழக்கறிஞர் உதவியை நாடுவதே பயனுள்ள தாக இருக்கும்.

சம்பந்தப்பட்ட அரசியல் சட்டம் மற்றும் கோரா. காம், என் சி எஸ்.எல்.ஓஆர்ஜி . லாடீச்சர்.நெட் மற்றும் பி ஆர் எஸ் இண்டியா.ஓ ஆர் ஜி போன்ற இணைய தளங்களிலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச.அன்பழகன், சென்னை 97 போன் 98413 73184

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர் : மீனா, கோமதி, ஆண்டாள், மீரா, சித்ரா, கௌரி, பிரியா, வசுமதி, தீபிகா.**

**இடம் : பாலாஜி நகரில் உள்ள மீனாவின் இல்லம்.**

**மாலை 4 மணி அளவில் தோழிகள் கூடுகிறார்கள்.**

மீனா : வாங்க! வாங்க! நீங்க எல்லாரும் வந்தது ரொம்ப சந்தோஷமா இருக்கு! உட்காருங்க! தண்ணி எடுத்துக்குங்க!

ஆண்டாள் : ரொம்ப நாளா உங்க வீட்டுக்கு வரணும் நினைச்சுக்கிட்டே இருந்தேன். இப்ப வந்துட்டேன்.

கௌரி : ஆமாம்பா! நானும் சொல்லிக்கிட்டே இருந்து, ஒரு வழியா வந்துட்டேன். அது சரி ஆடி மாத விழாக்களை ஆரம்பிக்கலாமா ?

ஆண்டாளக்கா! இன்னைக்கு மீராக்காவும், நீங்களும் சொல்லுங்கக்கா!

ஆண்டாள் : ஆடி மாதம் அம்மன் மாதம் என்றழைக்கப்படுகிறது. அம்மனுக்கு பூஜை, அபிஷேகங்கள், குண்டம் இறங்குதல், கூழ் வார்த்தல் என பல விதமான பூஜைகள் அம்மன் கோவில்களில் நடத்தப்படும்.

மீரா : தட்சணாயணம் ஆடி மாதம் தொடங்குகிறது. அதாவது சூரியனின் பயணம் தெற்கு நோக்கி ஆரம்பமாகும். தேவர்களுக்கு இது மாலைப்பொழுது என்பதால் வழிபாடுகள் நிகழ்த்த வேண்டிய காலம் என சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன.

ஆண்டாள் : ஆடிப்பூரம், ஆடித்தபசு, ஆடிப்பெருக்கு, வரலட்சுமி பூஜை, கருடபஞ்சமி, நாகசதுர்த்தி என பல பண்டிகைகள் ஆடிமாதத்தில் வரிசையாக வரும்.

சித்ரா : அது மட்டுமல்ல; ஆடி மாதம் தள்ளுபடி மாதம் Mostly எல்லாக் கடைகளிலும் ஆடித் தள்ளுபடி விளம்பரத்தைப் பார்க்கலாம்.

மீனா : ஆன்மீகத்திலும் ஆடித் தள்ளுபடி உண்டு என்று ஒரு உபன்யாசகர் கூறியுள்ளார். அவர் நம் கெட்ட எண்ணங்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; வஞ்சகம், சுயநலம் முதலிய எண்ணங்களைக் கழிக்க வேண்டும்; மனதில் படிந்துள்ள மாசுகளை நீக்கி, தூய்மையான பக்தியுடன் அம்பிகையை சரணடைய வேண்டும் என்று கூறினார்.

ஆண்டாள் : ஆடி மாதத்தில் சூரிய பகவான் கடக ராசியில் சஞ்சரிக்கிறார். கடகராசி சந்திரபகவானின் ஆட்சி வீடு. சிறு அம்சமான சூரியன் சக்தி அம்சமான சந்திரனின் ஆட்சி வீட்டில் சஞ்சாரம் செய்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீரா : ஆடி மாதம் விவசாயத்திற்குரிய மாதம். 'ஆடிப்பட்டம் தேடி விதை' என்றொரு பழமொழி உண்டு. சூரியனின் ஒளிக்கதிர்கள் ஆடி மாதத்தில் விவசாயத்திற்கு உகந்ததாக இருக்கும். ஆடி அமாவாசை முன்னோர் வழிபாட்டுக்கு உகந்த நாள்.

பிரியா : சங்கரன் கோவில் கோமதி அம்மனின் ஆடித்தபசு, ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டாளின் ஆடிப்பூரம் மற்றும் திருத்தேர் மிகச் சிறப்பாக நடைபெறும்.

ஆண்டாள் : ஆடிப்பெருக்கு மிகவும் விமரிசையாக காவிரி, கொள்ளிட நதிக்கரைகளில் கொண்டாடப்படுகிறது. முன்பு எல்லாம் பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து நதிக்கரையில் படைப்பது வழக்கம்.

வசுமதி : நான் சின்னதா இருக்கும் போது சப்பரம் இழுத்துக் கொண்டு ஆத்தங்கரைக்குச் சென்றது நினைவுக்கு வருது.

தீபிகா : எனக்கும் தான். ஆத்துலே பசங்க குதிச்சு, மகளிர் விடும் காசுகளைச் சேகரித்து எண்ணுவதைப் பார்த்திருக்கிறேன்.

மீரா : கலவை சாதம் கட்டிக்கொண்டு சென்று படைத்து வழிபடுவோம். பேசிக்கிட்டே இருந்தால், மீட்டிங்கே முடிந்து விடும் வேறு ஏதேனும் பேசலாமே!

கோமதி : ஐக்கியநாடுகள் சபையின் புதிய தலைவராக ஜெர்மனியின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் அனலீனா போர்பாக் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னாளில் நமது முதல் பாரதப் பிரதமரின் சகோதரி திருமதி. விஜயலட்சுமி பண்டிட் தலைவராக இருந்துள்ளார்.

சித்ரா : ஜம்மு காஷ்மீரில், உலகின் மிக உயரமான செனாப் ரயில் பாலம் திறக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் பெங்களூரைச் சேர்ந்த பேராசிரியையான மாதவி லதா அவர்கள் புவி தொழில் நுட்ப ஆலோசகராக 17 ஆண்டுகள் பாலத்தின் ஒப்பந்ததாரரான 'ஆப்கான்ஸ்' நிறுவனத்தில் இணைந்து பணியாற்றியுள்ளார். சவாலான நிலப்பரப்பு,

கடந்து, வெற்றிகரமாக இச்சாதனையை நடத்தி உள்ளார் . அவர் அவ்வளவு மகிழ்ச்சியாக கையை விரித்து எடுத்த போட்டோவை பேப்பரில் பார்த்த போது நமக்கும் உற்சாகம் வருகிறது.

பிரியா : கோந்து, மர பிசின் கேள்விப்பட்டிருக்றோம். அம்பர் என்பது ஒரு பிசின், கட்டியாக மாறிய மரப் பிசின், வரலாற்றில் முதல் முறையாக அண்டார்டிகாவில் இது கண்டுபிடிடிக்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் இந்த பனிக் கண்டத்திலும் கூட மரங்கள் இருந்திருக்கின்றன. என்பதை இந்த கண்டுபிடிப்பு உறுதி செய்துள்ளது.

மீனா : பிளாஸ்டிக் பை உபயோகிப்பதால் ஆபத்துகள் உருவாகும். நெகிழிகள் (Plastic) உடைந்து நுண் நெகிழிகளாகின்றன. (அதாவது 0.0001 மி. மீட்டருக்கும் குறைவானது) நம்மைச் சூழ்ந்திருக்கும் இவை உணவு, நீர், சுவாசம், நம் தோல் வழியாக உடலுக்குள் நுழையலாம். வியன்னா பல்கலைக்கழக ஆய்வாளர்கள், நம் உடலுக்குள் செல்லும் நுண்நெகிழிகள் உடலின் சில பாகங்களில் அப்படியே தங்கி விடுவதுடன், பாக்டீரியா போன்ற பால கிருமிகளால் ஏற்படும் வியாதிகளுக்கு நாம் உட்கொள்ளும் ஆண்டி பயாடிக் மருந்துகளை உறிஞ்சுக் கொள்ளவும் செய்வதால், கிருமிகள் சுதந்திரமாக பெருகுகின்றன என கண்டு பிடித்துள்ளனர்.

சித்ரா : 5 மி.மீட்டருக்கும் குறைவான நெகிழிகள் உலகின் எல்லா இடங்களையும் மாசுபடுத்தி வருகின்றன. மேகங்களிலுள்ள நுண்நெகிழிகளால் பருவ நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்காவைச் சேர்ந்த பென்சில்வேனிலா பல்கலைக்கழகம் கூறியுள்ளது.

கௌரி : நாம் மூச்சை வெளியிடும் போது அதில் வெளிப்படுகிற ஒரு வித வேதிப்பொருளை வைதது நுரையீரல் புற்று நோயைக் கண்டறிய முடியுமென சீனாவைச் சேர்ந்த ஜிஜியாங் பல்கலைக் கழகம் கண்டறிந்தள்ளது. நம் உடலிலுள்ள கொழுப்பு உடைக்கப்பட்டு, சக்தியாக மாற்றப்படும் போது உண்டாகும் ஐசோப்ரின் எனும் வேதிப் பொருள், நாம் விடும் மூச்சில் கலந்து உடலை விட்டு வெளியேறும். இந்த அளவு குறைவாக இருப்பின், நுரையீரல் புற்றுநோய் ஏற்பட்டு இருப்பதற்கான வாய்ப்புகள் உண்டென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 13 பேரே ஆய்வுக்கு உட்படுத்தி, சென்சார் கொண்டு அளவிட்டதில் இது தெரிய வந்துள்ளது. இந்த சென்சாரை மேலும் எளிமைப்படுத்தி, செம்மைப்படுத்தி, நவீனமயமாக்கி ஒரு கருவியாக வடிவமைக்க முயன்று வருகின்றனராம்.

தீபிகா : நானும் ஒண்ணு சொல்றேன்பா! விஞ்ஞானிகள் நம் குடல் ஆரோக்கியத்திற்கும், மூளைக்கும், மனநிலைக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக கண்டறிந்துள்ளனர். நம் குடலில் வாழ்கின்ற சில நல்ல நுண்ணுயிர்களால் மன அழுத்தத்தைக் குறைக்க முடியுமாம். ஹார்வட் பல்கலைக்கழக ஆய்வில் ஆரஞ்சு, திராட்சை, சாத்துக்குடி, எலுமிச்சை, நார்த்தங்காய், போன்ற சிட்ரஸ் பழங்கள் சாப்பிட்டால் குடலில் உள்ள ஃபேசிகலிபாக்டீரியம் பராஸ்நிட்சி என்கின்ற ஒரு வகை குடல் பாக்டீரியா பெருகும் என தெரிய வந்துள்ளது. இந்த பாக்டீரியாவுக்கும், மகிழ்ச்சி ஹார்மோன்களான செரொடொனின் (Serotonin) டோபோமைன் (dopomine) ஆகியவைகளின் உற்பத்திக்கும் தொடர்பு உள்ளது. இவை நமக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் தருவதுடன், மன அழுத்தத்தை 20% வரை குறைக்கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

வசுமதி : நானும் பழத்தைப் பற்றியே சொல்றேன். பழரசங்கள் தினமும் குடிப்பதில் சில தீமைகளும் உள்ளனவாம். பழங்களாக எடுத்துக்கொள்ளும் போது கிடைக்கும் நார்ச்சத்து, பழரசத்தில் கிடைப்பதில்லை. உடலில் உள்ள சர்க்கரை அளவினையும் பழரசங்கள் அதிகரிக்கச் செய்கின்றன. அமெரிக்காவில் உள்ள நார்த்வெஸ்டர்ன் பல்கலைக் கழகம் தனது ஆய்வில், பழரசம் தினமும் எடுத்துக் கொள்வதால் வாயிலும், குடலிலும் உள்ள நல்ல பாக்டீரியாக்கள் குறைந்து, கெட்ட பாக்டீரியாக்கள் அதிகரிப்பதாக கண்டு பிடித்துள்ளனர். பழமாக எடுத்துக்கொள்ள இயலவில்லை எனில் கூழாக்கி சதைப்பகுதியை வடிகட்டிவிடாமல் அப்படியே சாப்பிடுவது உடலுக்கு நல்லது என கணித்துள்ளனர்.

ஆண்டாள் : சரிப்பா! நிறைய பேசிட்டோம். அடுத்த மாதம் யார் வீட்டில் ?

மீரா : எங்கள் வீட்டில் சந்திப்போம். எங்கள் வீடு நந்தனத்தில் உள்ளது. Location அனுப்பி வைக்கிறேன்.

மீனா : ஓ. கேப்பா. நான் அல்வாவும், போண்டாவும் பண்ணியிருக்கேன். சாப்பிட்டு எப்படி இருக்குன்னு சொல்லுங்கள.

எனக் கூறி டிபனையும், காபியையும் கொடுத்து உபசரிக்க, அதன் பின் தோழிகள் கலைகின்றனர்.

நன்றி! வணக்கம்!

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்
# மங்கல சந்திப்பு - 2025

## <u>விண்ணப்பப் படிவம்</u>

பெயர் :

பிறந்த தேதி :

நட்சத்திரம் :

ராசி :

கோத்திரம் :

உயரம் :

எடை :

நிறம் :

கல்வித் தகுதி :

பணி விபரம் :

பணிபுரியும் நிறுவனம் :

பணிபுரியும் ஊர் :

வருட வருமானம் :

தந்தையார் பெயர் :

தந்தையார் பணி :

தந்தையார் பூர்வீகம் :

தாயார் பெயர் :

தாயார் பணி :

தாயார் பூர்வீகம் :

சகோதரர்கள் விபரம் :

சகோதரிகள் விபரம் :

தொடர்பு முகவரி :

அலைபேசி எண் :

# திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம்

பதிவு எண் : SRG / Trichy / 132 / 2024

## 22வது ஆண்டு மங்கல சந்திப்பு விழா

வணக்கம். திருச்சி கார்காத்தார் சங்கம் இதுவரை நடத்திய 21 மங்கல சந்திப்புகளின் மூலம் **1000**க்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்துள்ளன. எங்களது ராசியான 22வது மங்கல சந்திப்பு இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெற உள்ளது.

### 22வது ஆண்டு மங்கல சந்திப்பின் சிறப்புகள் :

1. மங்கல சந்திப்பிற்கு வருபவர்களுக்கு காலை தேநீர், மதிய உணவு வழங்கப்படும்.
2. பெற்றோர் தங்களது வரனை அவர்களே அறிமுகம் செய்வது.
3. வரன்களை பற்றிய முழு புத்தகமும், வண்ண புத்தகமாக வரனின் படத்துடன் ( Full Book in Multi Color with Profile Photo) அச்சிடப்பட உள்ளது.

நாள் : **15.08.2025 வெள்ளிக்கிழமை**

நேரம் : காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

இடம் : **LKS மஹால், அரிஸ்டோ ரவுண்டானா,**
மத்திய பேருந்து நிலையம் அருகில், திருச்சி – 620 001.

**பதிவு கட்டணம் : ரூ.800/-** (புத்தகம் மற்றும் தபால் செலவு உட்பட).
A/c Name : Trichy Karkatha Velalar Sangam, Indian Bank, Ponnagar Branch, Trichy-1. A/c No. **7947445069**
IFSC : IDIB000P105 என்ற வங்கி கணக்கிற்கு NEFT, Cheque, DD, Bank Transfer அல்லது QR Code மூலம் பணம் அனுப்ப வேண்டுகிறோம்.

### முக்கிய குறிப்புகள் :

1. பணம் செலுத்திய ரசீது நகலை விண்ணப்பத்துடன் கட்டாயம் இணைத்து அனுப்ப வேண்டும்.
2. கண்டிப்பாக பாஸ்போர்ட் **Size** கலர் போட்டோ ஒன்று இணைக்க வேண்டும்.
3. இணைக்கப்பட்டுள்ள படிவத்தை மட்டும் முறையாக எல்லா காலங்களையும் விடுதல் இன்றி தமிழில் தெளிவாக பூர்த்தி செய்து பதிவு தபால் அல்லது கொரியர் மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
4. அரங்கில் நேரடி பதிவு கிடையாது **(No Spot Registration)**
5. மங்கல சந்திப்பு அன்று வரனின் **Biodata** நகலும், ஜாதக நகலும், **Photos-2** எடுத்து வரவும்.
6. பதிவு செய்தவர்களுக்கு மட்டுமே புத்தகம் வழங்கப்படும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :**

**மணி பிரிண்டர்ஸ், C15/1, 5வது மெயின் ரோடு, இராமலிங்கநகர், உறையூர், திருச்சி – 620 003. Cell : 98424 75125**

## பதிவுக்கு கடைசி நாள் : 31.07.2025

**வாட்ஸ்அப் -ல் அனுப்பப்படும் பயோடேட்டா எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்பட மாட்டாது.**

| | |
|---|---|
| நவிலு. **N.B. பாலசுப்ரமணியன்** | **C.சபாபதி** |
| அமைப்பாளர் / திருமண மையம் | இணை அமைப்பாளர் **94459 17361** |

| | | |
|---|---|---|
| **G.சிவகுருநாதன்** | **C.சுப்ரமணியன்** | **N.பாண்டியன்** |
| தலைவர் / திருச்சி கார்காத்த வேளாளர் சங்கம் | செயலாளர் | பொருளாளர் |
| **98427 82837** | **98424 75125** | **94879 96520** |

# செல்வி தீக்ஷா ஜெய்கணேஷ்
# பரத நாட்டிய அரங்கேற்றம்








புதுச்சேரி முருகேசன் - அருள்மணி தம்பதியரின் மகன்வழிப் பெயர்த்தியும், சென்னை ஆழ்வார்திருநகர் தெய்வத்திரு. பாலசுப்பிரமணியன் - நலமுடன் சுந்தரி தம்பதியினரின் மகள் வழிப் பெயர்த்தியும், எங்களின் புதல்வி

**தீக்ஷா ஜெய்கணேஷ்** அவர்களின்

பரத நாட்டிய அரங்கேற்றம் 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை பெங்களூர் ஜனப்பதாரு சஸ்க்ருதிகா வேதிக்கே மண்டபத்தில் இனிதே நடைபெற்றது.

உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பெங்களூர் கார்காத்தார் சங்கத்தினர் வருகை தந்து விழாவை சிறப்பிதனர்.

அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி

அன்புடன்

**மு. ஜெய்கணேஷ்**

**ஜெ. லட்சுமி பிரியா**

# வாழ்க மணமக்கள்







மணமக்கள் :

**R.அரவிந்தன்** B.E., **I.சாந்தினி** (எ) **நிலா** M.Com.,

மணநாள் : **04.05.2025 ஞாயிற்றுக்கிழமை** சிக்னேச்சர் திருமண மஹால், மயிலாடுதுறை.

03.05.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற மணமக்கள் வரவேற்பிற்கும்
04.05.2025 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற திருமண விழாவிற்கும் வருகைபுரிந்து
மணமக்களை வாழ்த்தி விழாவினை சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள்
அனைவருக்கும் எங்களுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றென்றும் அன்புடன்,

**S. ரமேஷ்**
**ராதை ரமேஷ்,**
நெய்வேலி

**C. இளங்கோ**
**அனுராதா இளங்கோ**
மயிலாடுதுறை.

# வாழ்த்துகிறோம்






சதாபிஷேகம் காணும்
கார்குல கல்வி கடவுள்
திரு.ச.வெங்கடேசன் பிள்ளை
திருமதி வெ.ஞானாம்பிகை
இணையரிடம் வாழ்த்து பெற்ற தருணம்....

கார்குல முன்னோடி, கார்குல வள்ளல்,
CREW நிறுவனர், ஆயிரம் பிறை கண்ட
**திரு.ச.வெங்கடேசன் பிள்ளை**
**திருமதி.வெ.ஞானாம்பிகை**
தம்பதிகளை வாழ்த்தி வணங்குகிறோம்.

## நங்கநல்லூர் வட்டார
## கார்காத்தார் சமூக நலச்சங்கம்

| | | |
|---|---|---|
| வை.செல்வகுமார் | கோ.தியாகராஜன் | க.சரவணன் |
| பொருளாளர் | செயலாளர் | தலைவர் |

மற்றும்
நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் & மகளிரணியினர்

# ஆதிவ் கருத்தரித்தல் மையம் & மகப்பேறு மருத்துவமனை

343, குன்றத்தூர் மெயின் ரோடு, மாங்காடு, சென்னை – 600 122.

☎ : 044 - 2679 2003 / 96006 11793 / 96001 90595 / 98942 17025




1.7.2025 செவ்வாய்கிழமை அன்று சென்னை மாங்காட்டில் ஆதிவ் கருத்தரித்தல் மையம் & மகப்பேறு மருத்தவமனை திறப்பு விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு வேளாண்மை & உழவர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு M.R.K. பன்னீர்செல்வம் அவர்களும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், துறை அமைச்சர் மாண்புமிகு தா.மோ. அன்பரசன் அவர்களும், சென்னை ராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சேர்மன் மேனேஜிங் டைரக்டர் திரு. S. வெங்கடேசன் அவர்களும் திருமதி ஞானாம்கபிகை வெங்கடேசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திரு. S. ரவிச்சந்திரன், திருமதி. ஜெயந்தி ரவிச்சந்திரன்

டாக்டர். P.S. பாக்யராஜ், டாக்டர். S.R. சுபஸ்ரீ, B. சாய் ஆத்விகா

# ஆதிவ் கருத்தரித்தல் மையம் & மகப்பேறு மருத்துவமனை திறப்பு விழா











# ஆதிவ் கருத்தரித்தல் மையம் & மகப்பேறு மருத்துவமனை திறப்பு விழா










# ஜெயந்தன் - தேசிகா திருமண நிகழ்வு



சீர்காழி நகர கார்காத்தார் வேளாளர் சங்கத்தின் சாசன செயலாளர்,
முன்னாள் தலைவர், சி.முத்தையாப் பிள்ளை அறக்கட்டளை நிறுவனர்,
நாயன்மார்கள் அறக்கட்டளைச் செயலாளர்,
குருஞானசம்பந்தர் ஆரம்பப்பள்ளி, மாதிரிவேளூர் செயலாளர், திரு.இரா.முரளி,
சியமளா பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியை திருமதி.க.ரேவதி இவர்களின்
புதல்வன் **M.ஜெயந்தன்** கீழ் அதங்குடி திரு.வே.மதியழகன் – திருமதி.ம.காந்திமதி இவர்களின்
புதல்வி **M.தேசிகா** இவர்களின் திருமணம் 06.06.2025 அன்று சீர்காழி ஏஞ்சல் மஹாலில்
இறைவன் திருவருளாலும் ஸ்ரீலஸ்ரீ தருமை ஆதினம் 27வது குருமஹா சந்நிதானம்
குருவருளாலும் நடைபெற்றது அவ்வமயம் மணமக்களை மாநில கார்காத்த வேளாளர்
சங்க தலைவர் திரு.கே.கே.ஆர் சுரேஷ், பொதுச்செயலாளர் திரு.பாலசுப்ரமணியன்,
அமைப்புச் செயலாளர் திரு.கைலை.சண்முகம் ஆனந்தம் பவுண்டேஷன் மாருதி திரு.செல்வகுமார்,
சேவைச் செம்மல்கள் திரு.சிங்காரவேலு, திரு.பிரபாகரன், மக்கள் மருத்துவர் திரு.ராஜசேகர்,
குழந்தைநல மருத்துவர் கொள்ளிடம் திரு.முருகேசன், சீர்காழி, மயிலாடுதுறை, சிதம்பரம்
பகுதி கார்குல சங்க பொறுப்பாளர்கள் தருமை ஆதீன கல்வி நிறுவனங்களின் செயலாளர்கள்,
சீர்காழி முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள்,
நகர் மன்ற முன்னாள் இந்நாள் தலைவர்கள், பள்ளி செயலர் குடும்பத்தினர், மருத்துவத்துறை
இயக்குநர், கல்வித்துறை, மருத்துவத்துறை நண்பர்கள், வியாபார பெருமக்கள்,
சமூகசேவை அமைப்புகள், ஊடகத்துறை நண்பர்கள், அரசியல் பிரமுகர்கள்,
அரசு அலுவலர்கள், ஓய்வுபெற்ற அலுவலக சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள்
இனிய சொந்தங்கள் உயிர் நண்பர்கள் அனைவரும் வருகை தந்து வாழ்த்தி சிறப்பித்தனர்.

## வருகைக்கு வணக்கங்கள், வாழ்த்துக்கு நன்றிகள்













வாழ்த்துக்களுடன்...

# சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கம்
# சி.முத்தையாப்பிள்ளை அறக்கட்டளை,
# நாயன்மார்கள் அறக்கட்டளை, சீர்காழி.

# மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் தரணிகுமார் ஆர் ஏ** |
| படிப்பு | B.E. (CSE) |
| வேலை | Lead Software Engineer, Freshworks, Chennai |
| | Rs. 35 Lakhs / PA |
| பிறந்த தேதி | 19.11.1996 |
| உயரம் | 6' - 2" |
| நட்சத்திரம் | பூரட்டாதி |
| கோத்திரம் | பருவுட |
| பூர்வீகம் | திருப்புங்கூர் |
| தகப்பனார் | **அன்பழகன் .எஸ்** இரயில்வே. (ஓய்வு) |
| தாயார் | **இந்துமதி .ஏ** (மோட்டாத்தூர்) |
| முகவரி | 46ஏ, விநாயகா காலனி, |
| | திருவிழந்தூர், |
| | மயிலாடுதுறை |
| | Cell : 99425 22345 / 96563 31212 / 93459 76887 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. RAVEEN KUMAR** |
| படிப்பு | M. Tech., VLSI., |
| வேலை | Senior Lead Engineer |
| | Qualcomm, Bangalore |
| | Rs. 45 lakhs per Annum |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | Sathayam |
| கோத்திரம் | Kanagarayar |
| பூர்வீகம் | Madurai |
| தகப்பனார் | **A. Sankar** |
| | Retd Director of School Education |
| தாயார் | **P. Vasanthi** |
| | Retd Head Mistress Govt HSS School |
| முகவரி | Plot No. 28 & 29, VGN Highness, |
| | Srinivasapuram, Iyyappanthangal, Chennai-600056. |
| | Cell : 7845914635/ 9488094635 |
| விருப்பம் | Employed or Employable Good looking girl belongs to respectable family |

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் E. DINESH RAJ |
| படிப்பு | B. Tech., MS (USA) |
| வேலை | Manager, Business Analytics and Insights, Walmart, Sunnyvale, California (H1B visa holder) |
| பிறந்த தேதி | 18.02.1998 |
| உயரம் | 5'-9" |
| நட்சத்திரம் | Vishakam |
| கோத்திரம் | Sathanuda |
| தகப்பனார் | **B. Eswaran,** Retired Manager, PSU-IOC |
| பூர்வீகம் | Hariharankoodal (Mayiladuthurai) |
| தாயார் | **E. Kanagasundari**<br>Kzhu kanimuttam (Mayiladuthurai) |
| முகவரி | No. 9, Venkateswara Nagar,<br>Kodungaiyur, Chennai - 600 118.<br>Cell : 9791105041/ 7418951092 |
| விருப்பம் | Fair looking bride preferably working in USA |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் இ. சக்திஞானவேல் |
| படிப்பு | B.Tech. (CSC), |
| வேலை | Senior Software Engineer, Oracle, Bangalore<br>Premium Salary |
| பிறந்த தேதி | 26.02.1998 |
| உயரம் | 183 cm |
| நட்சத்திரம் | சதயம் |
| கோத்திரம் | கொங்கராய |
| பூர்வீகம் | கொல்லாபுரம் (ஜெயங்கொண்டம்) |
| தகப்பனார் | **வா. இளங்கோவன்,** MBA, Business |
| தாயார் | **இ. ஜோதிமணி,** B.Com., Business<br>(துரிஞ்சிக்கொல்லை – சேத்தியாதோப்பு) |
| முகவரி | 425/16, டவர் வியூ காலனி. 17th Street,<br>6th Avenue, Anna Nagar, Chennai- 600 040.<br>Cell : 91764 14470 / 98419 70470 |
| விருப்பம் | B.E., / B.Tech. படித்த நல்ல வேலையில் உள்ள வரன். |



# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. சிவசங்கர் |
| படிப்பு | B.E., |
| வேலை | Software Engineer, Murugappa Group,<br>Dare House, Chennai - 1.)<br>Rs. 6.4 Lakhs / PA |
| பிறந்த தேதி | 21.11.1998 |
| உயரம் | 180 cm |
| நட்சத்திரம் | கேட்டை |
| கோத்திரம் | கொங்கராய |
| பூர்வீகம் | திருவிசநல்லூர் |
| தகப்பனார் | B. செந்தில்குமார் |
| தாயார் | S. புவனேஸ்வரி,<br>(கடிச்சம்பாடி) |
| முகவரி | மணிப்பிள்ளை இல்லம்,<br>669, பெரிய வெள்ளாளர் தெரு,<br>திருவிசநல்லூர்,<br>திருவிடைமருதூர் தாலுக்கா - 612 105.<br>Cell : 99437 84829, 89036 71054 |
| விருப்பம் | பணியில் உள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் R.S. பாலாஜி |
| படிப்பு | B.Tech. (Mech), IIT Madras |
| வேலை | Engineer, Jaguar Land Rover, Bangalore |
| பிறந்த தேதி | 07.05.1999 |
| உயரம் | 181 cm |
| நட்சத்திரம் | உத்திராடம் (பாதம் 2) |
| கோத்திரம் | திட்டதுட |
| பூர்வீகம் | குணமங்கலம் (ஸ்ரீமுஷ்ணம்) |
| தகப்பனார் | R. சிவகுமார்,<br>Senior Planner, CMDA, Chennai |
| தாயார் | M.S. மஞ்சுளா,<br>P.G. Asst., Govt. School, Chennai<br>மூவலூர் (மயிலாடுதுறை) |
| முகவரி | அண்ணா நகர் மேற்கு விரிவு,<br>சென்னை - 101.<br>Cell : 94440 55256, 94440 55206 |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி T.A. சுப்பிரியா |
| படிப்பு | B.Com., M.Sc., Professional Accounting |
| வேலை | VAT Accounting in UK |
| பிறந்த தேதி | 07.09.1999 |
| உயரம் | 5' - 5" |
| நட்சத்திரம் | பூசம் |
| கோத்திரம் | சாத்துகுட |
| பூர்வீகம் | கழனிவாசல் |
| தகப்பனார் | கி. தியாகராஜன், London, U.K. |
| தாயார் | தி. அருள்மொழி, H.M., Union School, Kalanivasal |
| முகவரி | 65, மேல வெள்ளாளர் தெரு, 25, கழனிவாசல், மங்கைநல்லூர் Post, மயிலாடுதுறை மாவட்டம்–609404. Cell : 94434 56430 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் செ. சூர்யகுமார் |
| படிப்பு | M.E., |
| வேலை | Control Engineer, G.E. India Pvt. Ltd., Hyderabad, |
| பிறந்த தேதி | 28.10.1997 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | உத்திரம் |
| கோத்திரம் | வண்ணமுட |
| பூர்வீகம் | காவனூர், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், கடலூர் மாவட்டம் |
| தகப்பனார் | V. செல்வம், வட்டாரக் கல்வி அலுவலர் (பணி நிறைவு) |
| தாயார் | K.R. சாந்தி, பட்தாரி ஆசிரியர், விருத்தாசலம் (S.R. நகர், சிதம்பரம்) |
| முகவரி | பழனி முருகன் நகர், பூதாமூர், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம் - 606 003. Cell : 97515 39933, 94424 26123 |



# மணமகள் தேவை

பெயர் செல்வன் **SARAVANAKUMAR . G**
படிப்பு B.E in Electrical & Electronics Engg,
வேலை Salcomp Manufacturing Pvt.Ltd.
Sriperumpudur,Kanchipuram District.
Rs. 35,000/- per month.
பிறந்த தேதி 01/05/1994
உயரம் 5'9"
நட்சத்திரம் ரோகிணி
கோத்திரம் KADAMUDA
பூர்வீகம் கூடலூர்
தகப்பனார் **GNANAPRAKASAM .K.V**
தாயார் **VASUGI .G**
முகவரி 94, Middle Street,
Gudalur Post, Tittakudi Taluk,
Cuddalore District. PIN: 606111
Cell : 9688951066, 7373831555



பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 14.5 Lakhs / PA
பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com



பெயர் செல்வன் **Varun Jayachandran**
படிப்பு BE Mechanical Engineering,
MISM-BIDA, Carnegie Mellon University, USA
வேலை JPMorgan Chase & Co,
New Jersey, USA
ãwªj njâ 02.09.1996
உயரம் 6' 2"
நட்சத்திரம் Bharani (Pada2)
கோத்திரம் Saathukuda
பூர்வீகம் Manalmedu, Mayiladuthurai district
தகப்பனார் **Jayachandran .S**
Sustainability Consultant
தாயார் **Dr. Geetha Thiagarajan**
CTO Life Sciences, TCS
முகவரி 907 Plaza Dr, Woodbridge, New Jersey, USA
Cell +1 908 5482813,
+1 732 6426254
+91 99621 75873
விருப்பம் Looking for bride, preferably working in USA



# மணமகன் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி **S.R. Vidhya** |
| படிப்பு | B.E. (ECE), |
| வேலை | Software Engineer, CTS, Chennai<br>Rs. 5 Lakhs / PA |
| பிறந்த தேதி | 23.05.2000 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | உத்திராடம் |
| கோத்திரம் | சேதுராய |
| பூர்வீகம் | மண்ணிப்பள்ளம் |
| தகப்பனார் | **S. Ramesh** (Landlord) |
| தாயார் | **R. Rajalakshmi** (Kollapuram) |
| முகவரி | 5/809, Vellalar Street,<br>Mannipallam (PO),<br>Mayiladuthurai - 609 112.<br>Cell : 94862 78272, 94424 87395 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி செ. சுவாதிகா** |
| படிப்பு | B.E – EEE |
| வேலை | Senior Manager - Data Analytics -<br>Schneider Electric, Bangalore.<br>Rs. 22 Lakhs / Annum |
| பிறந்த தேதி | 07.04.1998 |
| உயரம் | 163cm |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | காருடையான் |
| பூர்வீகம் | மயிலாடுதுறை |
| தகப்பனார் | **S. செல்வபாண்டியன்,** B.Sc.,M.A.,<br>Admin manager, Pvt, Coimbatore |
| தாயார் | **G. முல்லை,** M.Sc., B.Ed., PGDCA,<br>Teacher Govt Higher Secondary School, Coimbatore<br>(மாப்படுகை-மயிலாடுதுறை) |
| முகவரி | பேராசிரியர் காலனி, ஶ்ரீ ரங்கா நகர்,<br>பெரியநாயக்கன்பாளையம்,<br>கோயம்புத்தூர் - 641020.<br>Cell : 9486442415 /9486034623<br>E-mail : mullaigopalakrishnan@gmail.com |
| விருப்பம் | பெங்களூரில் பணிபுரியும் வரன் மற்றும் பணிபுரிய விருப்பம் உள்ள வரன். |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி S. அம்பிகா |
| படிப்பு | M.Sc., B.Ed., |
| பிறந்த தேதி | 01.02.1998 |
| நட்சத்திரம் | உத்திரட்டாதி |
| கோத்திரம் | தீயனுட |
| பூர்வீகம் | நெய்வாசல் |
| தகப்பனார் | A. சிவகுருநாதன், ஆசிரியர் பணி நிறைவு |
| தாயார் | J. இந்திரா, ஆசிரியர் பணி நிறைவு |
| முகவரி | 12/58, S.R. நகர், IInd Cross, சிதம்பரம் - 608 001. கடலூர் மாவட்டம் Cell : 99444 19423, 99445 03832 |
| குறிப்பு | சட்டப்படி விவாகரத்து பெற்றவர். குழந்தை இல்லை |
| விருப்பம் | அரசு (அ) தனியார் வேலை 1993க்குப்பின் பிறந்த வரன். |

| | |
|---|---|
| பெயர் | செல்வி S. சுதந்திரா |
| படிப்பு | B.Sc., M.B.A., |
| வேலை | Officer, Canara Bank, Chennai Rs. 10 Lakhs / PA |
| பிறந்த தேதி | 15.08.1997 |
| உயரம் | 164cm |
| நட்சத்திரம் | மூலம் 4-ம் பாதம் |
| கோத்திரம் | சாத்துக்குட |
| பூர்வீகம் | வரவுக்குடி |
| தகப்பனார் | K. சிவக்குமார், Business |
| தாயார் | M. வசுமதி, Govt. Teacher சாத்தனூர் |
| முகவரி | 7A, சமயபுரம் நகர், லால் பகதூர் சந்து, நல்லத்துக்குடி, மயிலாடுதுறை - 609 001. Cell : 93605 21070, 96266 71105 |
| விருப்பம் | Employee in Bank / Govt / IT Company |



| | |
|---|---|
| பெயர் | செல்வி S. சிவஸ்ரீ |
| படிப்பு | B.Tech (CSC) |
| வேலை | Software Engineer, CTS, Bangalore Rs. 6.5 Lakhs/PA |
| பிறந்த தேதி | 04.03.2000 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | நெப்புக்குட |
| பூர்வீகம் | கீழப்பெரும்பள்ளம் |
| தகப்பனார் | S. செந்தில்வேல், ஆசிரியர் |
| தாயார் | K.N. கனிமொழி, ஆசிரியை |
| முகவரி | 225, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேஷன் ரோடு, மயிலாடுதுறை - 609 001. Cell : 99523 23129, 99528 54839 |
| விருப்பம் | சமபடிப்பு, பணியில் உள்ள வரன். 1996 மற்றும் அதற்கு பிறகு பிறந்த வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் GOBI .S |
| படிப்பு | M.S. -Computer Science (USA) Executive MS Information Technology (USA) M.Tech. Software Engineering, Chennai |
| வேலை | Senior Data Engineer Encora Innovations Labs Chennai - 97. |
| பிறந்த தேதி | 19.08.1993 |
| உயரம் | 163cm |
| நட்சத்திரம் | பூரம் |
| கோத்திரம் | சாத்தனுட |
| பூர்வீகம் | இளந்தோப்பு (பட்டவர்த்தி) |
| தகப்பனார் | R. Santhanam |
| முகவரி | Flat A46, SAF Grand Tower, SAF Games Village, Koyambedu, Chennai - 107. Cell : 93812 50271, 93811 57831 |








# KBF Biz-Connect KARKATHAR BUSINESS FORUM

**(கார்காத்தார் தொழில் முனைவோர் பேரவை)**

**Chief Guest :Mr.Yogeswaran.M.D Matexnet, a leading Procurement & Auction Platform in India**

**TOPIC : PREPARING OUR BUSINESS FOR THE DIGITAL ERA**

**Monthly meeting - ANDHRA CHAMBER OF COMMERCE- CHENNAI on SATURDAY 28/06/25**












1. **V.KANNAN** BALAJI FOUNDATIONS
2. **C.THIYAGARAJAN** VIDVAR COMPANY
3. **M.ARUNACHALAM** MAGNUM CNC
4. **R.KARTHIKEYAN** NAMRATHAA CONSTRUCTION
5. DR.**ASOKAN** NATURE SUN SHINE HERBALS
6. **ARUNA SENTHIL** ORU KUCHI ORU KULFI
7. **S.T.RAMANATHAN** GUEST
8. **C SRIDHAR** INFO DESIGN SYSTEMS
9. **S.BALAMURUGAN** FINANCIAL ADVISOR
10. **N.PONNAMBALAM** FOTO SPACE
11. **B.SENTHILNATHAN** TECHNO MIND
12. **N.SUDHAKAR** EXULTANT FABRICATORS
13. **M.SARANYA** SPACE PLAY DESIGN STUDIO
14. **MADHAN** SPACE PLAY DESIGN STUDIO
15. **SARAVANAN** BUILD IN INTERIORS
16. **S.MUTHUKUMAR** SHIVALI CONSTRUCTIONS & PARTY HALL
17. **M.BALAMURUGAN** ADYA INTERIORS
18. **R.SAYON** VIVHA INVESTMENTS
19. **K.MUTHUSANKAR** CURSOR CONTROL P LTD
20. **M.ARUMUGAM** SMART DIE CASTINGS
21. **LATHA KARTHIKEYAN** YOGA TEACHER
22. **P.AGORAM** J P AIRCON

**Meeting will be held on the last Saturday evening of every month**

| President | Secretary | Treasurer |
|---|---|---|
| M.Balamurugan | N.Ponnambalam | V.Kannan |








# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/7** செல்வி **R. சுவாதிகா**<br>மூலம் – 3ம் பாதம்<br>சென்னிமலையான்<br>பூர்வீகம் : கல்லக்குடி – டால்மியாபுரம்<br>விருப்பம் : பட்டம் பயின்று நல்ல வேலையில் உள்ள மணமகன் | **17.3.2001**<br>150 cm | B.E., (EEE) | | திரு. S. இராஜாராமன்,<br>5, கர்ணம் தெரு,<br>கல்லக்குடி – டால்மியாபுரம்,<br>லால்குடி Tk.,<br>திருச்சி Dt. – 621 652.<br>Cell : **99430 39473, 97877 83735** |
| **B 2/7** செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal Medicine M.D., | Sr. Resident Doctor at a Private Medical College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| **B 3/7** செல்வி **G. மகாலட்சுமி**<br>மகம்<br>கனகராய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன். | **15.11.95**<br>165 cm | B.E. (EEE) | Software Company | திரு. R. ஞானசம்மந்தம்,<br>No. 2, மின் நகர் மெயின் ரோடு,<br>இராமகிருஷ்ணா பள்ளி அருகில்,<br>சிதம்பரம்<br>Cell: **99769 97310,90954 68213** (W) |
| **B 4/7** செல்வி **B. அனிதா**<br>மூலம் – 4ம் பாதம்<br>காலிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி<br>விருப்பம் : நன்கு படித்த பணியில் உள்ள வரன். | **12.11.99**<br>160 cm | B.Com., | | திரு. G. பாஸ்கர்,<br>மேற்கு தெரு, அருகேரி,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம் – 606 105.<br>Cell : **99769 64604** |
| **B 5/7** செல்வி **ஐ. பவித்ரா**<br>பூராடம் (4ம் பாதம்)<br>கனகராய<br>பூர்வீகம் : விருத்தாசலம் | **20.5.2003**<br>165 cm | B.Tech Information Technology | System Analyst Cognicent Technlogy Solution, Chennai<br>Rs. 4,00,000/PA | திரு. S. ஐயப்பன்,<br>126/89, பாரதியார் தெரு,<br>பெரியார் நகர் (வடக்கு),<br>விருத்தாசலம்<br>(சந்திரா பேக்கரி பின்புறம்)<br>Cell : **97513 94727, 84390 38927** |
| **B 6/7** செல்வி **M. யாழினி**<br>பூசம் 2ம் பாதம்<br>வில்வராய<br>பூர்வீகம் : காவனூர் (ஸ்ரீமுஷ்ணம்)<br>விருப்பம் : சமமான கல்வி மற்றும் நல்ல பணியில் உள்ள வரன். | **6.6.2000**<br>5' - 6" | MOT<br>Master of Ocupational Therapy | Asst. Professor Banaglure<br>Rs. 6,00,000/PA | திரு. M. மணிவண்ணன்,<br>Plot No. 52, ஸ்ரீ சத்யசாய் நகர்,<br>மகாலட்சுமி நகர் 7வது விரிவு,<br>நந்திவரம்,<br>கூடுவாஞ்சேரி – 603 202.<br>Cell : **90030 19713**<br>E-mail : muthumanikvr@gmail.com |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 7/7** செல்வி **செ. அபிநயா**<br>மூலம் 3ம் பாதம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : திருவிளையாட்டம்<br>விருப்பம் : B.E., அல்லது சம படிப்பு | 07.04.99<br>170 cm | B.Com.,<br>MBA., | Executive - HR,<br>HCL Technologies,<br>Chennai | திருமதி. செ. கவிதா,<br>3/4, பெரிய தெரு,<br>அக்ரஹாரம், சேந்தங்குடி,<br>மயிலாடுதுறை – **609 118.**<br>Cell: **94868 49107, 94436 05067** |

## செல்ஃபி மோகம்

Dr. D. Kalyanakumar, Trichy-18.

ஒரு காலத்தில் புகைப்படம் எடுத்தால் ஆயுள் குறையும் என்று சொன்னார்கள். இப்போது மொபைல் போன்கள் அதிகரித்துள்ள நிலையில், தனக்குத் தானே புகைப்படம் எடுத்துக்கொள்கின்றனர். அதை செல்ஃபி என்று நாகரிகமாகச் சொல்லிக் கொள்கின்றனர். துணிச்சல், சாகசம் என்று பெயர் எடுப்பதால் எந்த பலனும் இல்லை. அதனால் சாதிக்கப் போவது எதுவும் இல்லை. உங்களை வளர்க்க பெற்றோர் எவ்வளவு துன்பங்களைத் தாங்கிக் கொள்கின்றனர்.

புகைப்படம் எடுப்பது யாருக்குத்தான் பிடிக்காது ? புகைப்படம் எடுத்து வைததுக்கொள்வது, எதிர்காலத்தில் அந்தத் தருணத்தை வாழ்க்கை முழுவதும் நினைவுகூர்ந்து பார்ப்பது என்பது அலாதியான சுகம் தான். எனினும் முன்பெல்லாம் புகைப்படம்எடுப்பதுஎன்பதுவருடத்திற்குஒருமுறையே நடக்கும் ஏதாவது விசேஷ நாட்களில் குடும்பத்துடன் சென்று போட்டோ ஸ்டுடியோவில் எடுத்துக்கொள்வது வழக்கம். ஆனால் டெக்னாலஜி வளர்ச்சிக்கு பிறகு எல்லோருடைய கைகளிலும் கைப்பேசி வந்துவிட்டது. அது நமக்கு பலவிதத்தில் பயன்பட்டாலும், முக்கியமாக இளைய தலைமுறைகள் செல்ஃபி எடுக்கவே அதிகம் இதைப் பயன்படுத்துகின்றனர். கைப்பேசியை வைத்து தன்னைத்தானேபுகைப்படம்எடுப்பதேசெல்ஃபியாகும். நம்மை நாமே புகைப்படம் எடுத்துக்கொள்வது என்பது உலகம் முழுவதும் பிரபலமாக தொடங்கியது. செல்ஃபி எடுப்பதால் எப்படி நன்மைகள் உண்டோ, அதே போல தீமைகளும் உண்டு.

எதற்கெடுத்தாலும் செல்ஃபி எடுக்கும் பழக்கம் இளம் தலைமுறையினரிடையே உள்ளது. இந்த செல்ஃபி மோகத்தால் இளம் தலைமுறையினர் உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்காதவர்களாக ஆகிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கருப்பான முகத்தை வெண்மையாக்கி, சிறிய கண்களை பெரியதாக்கி, பருக்கள் மற்றும் தழும்புகளை நீக்கி, முகத்தையும் உடலையும் மெலியச் செய்து காட்டுவது என தங்கள் அடையாளத்தையே முழுவதுமாக மாற்றி வழுவழுப்பான முகத்துடன் பேரழகாக காட்டிக்கொண்டு போலியான உலகத்தில் வாழுகிறார்கள். திருமணத்திற்கு வரன் தேடும் வலைத்தளங்களில் இது போன்ற புகைப்படங்களை பதிவிடுகின்றனர். இதனால் நேரில் பார்ப்பதற்கும் நிழற்படத்துக்கும் நிறைய வேறுபாடு இருப்பதால் பெண்ணையோ, ஆணையோ நிராகரிப்பதும் நடந்து வருகிறது. அந்த நேரத்தில் ஏற்படும் மனஉளைச்சலும் வேதனையும் மிக அதிகம். பெண்கள் தங்கள் புகைப்படங்களை எல்லோரும் பார்க்கும்படி பகிருவதால் ஏற்படும் ஆபத்துகளை பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த புகைப்படங்களை யார் வேண்டுமானாலும் தங்களுடைய போனில் தரவிறக்கம் செய்யலாம் அதைஎப்படி வேண்டுமானாலும் ‘மார்ப்பிங்’ மூலம் மாற்றம் செய்து தவறான நோக்கத்திற்கு பயன்படுத்த முடியும். இதனால் அவர்களுடைய எதிர்காலமே கேள்விக்குறியாகிவிடும்.

சுற்றி இருக்கும் நிஜ உலகத்தை மறந்து இந்த நிழல் திரைக்குள் சிக்கிக் கொண்டால் நமது பொன்னான நேரமும் வீணாகி, விபரீதமும் விளைகிறது. அழகியல் சார்ந்த உணர்வுகள் இருப்பது அவசியம் தான். வாழ்க்கையை சுவாரஸ்யமாக நகர்த்தி செல்வதும் ரசனைகளே ஆயினும் எதிலும் எல்லை மீறாமல் எச்சரிக்கையாக இருப்பது நன்மை பயக்கும் அது புகைப்பட போதைக்கும் பொருந்தும்.

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 1/7** செல்வன் **M. சரவணன்**<br>திருவாதிரை<br>வங்காரமுட<br>பூர்வீகம் : வானமாதேவி–காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : படித்த குடும்ப பாங்கான பெண். | **08.07.94**<br>170 cm | B.E. (ECE) | Cognizant Technologies Solutions, Senior Process Executive<br>Rs. 5 Lakhs / PA | திரு. B. முத்துக்குமரன்,<br>வெள்ளாழத் தெரு,<br>வானமாதேவி & PO,<br>காட்டுமன்னார்கோவில் Tk.–**608 701.**<br>Cell : **91768 40787, 91764 65658** |
| **G 2/7** செல்வன் **V. அஜித்குமரன்**<br>அசுவினி<br>பருவுட<br>பூர்வீகம் : அருகேரி (பெண்ணாடம்)<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | **21.11.99**<br>174 cm | B.E. (MCT) | State Bank of India<br>Salem<br>Rs. 8 Lakhs/PA | திரு. R. வரதராஜன்,<br>2/632, ஆரமரத்துகாடு By Pass<br>காமராஜர் சிலை அருகில்,<br>எருமாபாளையம் PO.,<br>சேலம் – **636 015.**<br>Cell: **9443134352** (W), **9442213435** |
| **G 3/7** செல்வன் **பாலாஜி S.R.**<br>ரோகிணி<br>முதனுட<br>கோட்டவம் – காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு. | **30.01.96**<br>180 cm | B.Tech<br>MBA | Accenture<br>Chennai<br>Analyst<br>Rs. 9 Lakhs.PA | திரு. S. ராம்தாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், லாஸ்பேட்,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : **94425 80571, 86108 73478** |
| **G 4/7** செல்வன் **V. வெங்கடேசன்**<br>மகம்<br>சாத்துகுட<br>பூர்வீகம் : T.V. புத்தூர், விருத்தாசலம்<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன் | **22.02.97** | DME | இராதா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>சென்னை<br>Rs. 35,000/PM | திரு. வீரசுப்பிரமணியன்,<br>அகர ஆலம்பாடி (PO),<br>சேத்தியாதோப்பு வழி,<br>புவனகிரி (Tk) – **608 702.**<br>Cell : **9786199060** |
| **G 5/7** செல்வன் **D. Natarajan**<br>பூராடம்<br>கனகராய<br>சிரகிழந்தநல்லூர் | **25.11.87**<br>177 cm | MBA., | Manager Materials in Automotive Company,<br>Sriperumbudur<br>Rs. 9 Lakhs/PA | திரு. N. Dharmarajan<br>33A/5, Apparao Street,<br>Periya Kanchipuram,<br>Cell : **94452 69382, 98846 00769** |
| **G 6/7** செல்வன் **S. மோகனசுந்தரம்**<br>மகம்<br>வில்வராய<br>பூர்வீகம் : பூம்புகார் | **23.1.2000**<br>184 cm | M.Sc (CS)<br>Gold Medal | CTS<br>Bangalure<br>Rs. 6 Lakhs/PA | திரு. R. சோமசுந்தரம்,<br>1/261, வெள்ளையனிருப்பு தெரு,<br>பூம்புகார் – சீர்காழி தாலுக்கா,<br>மயிலாடுதுறை மாவட்டம்<br>Cell : **94425 87294, 89396 17585** |
| **G 7/7** செல்வன் **R.S. ரோஹித்ராஜ்**<br>ரோகிணி<br>தென்னம்பிரிய<br>பூர்வீகம் : அரியலூர்<br>குறிப்பு : சட்டப்படி விவாகரத்து ஆனவர் | **16.9.95**<br>174 cm | B.E., M.B.A., | Consultant<br>TCS, Chennai<br>Rs. 10,00,000/PA | திரு. A.R. சரவணன்,<br>64, A-3, சின்னகடைத் தெரு,<br>அரியலூர் – **621 704.**<br>Cell : **94867 88475, 80727 52125** |
| **G 8/7** செல்வன் **வெ. ஆனந்தகிருஷ்ணன்**<br>மிருகசீரிடம்<br>தொழுவட<br>பூர்வீகம் : குழுமூர் | **02.4.98** | Diploma<br>Mechanical | கேம்ப் –<br>மாலத்தீவு<br>Rs. 25,000/PM | திரு. கி. வெங்கடேசன்,<br>செல்லியம்மன் கோவில் தெரு,<br>குழுமூர் அஞ்சல்,<br>செந்துறை வட்டம்,<br>அரியலூர் மாவட்டம் – **621 714.**<br>Cell : **96009 83204** |

# இல்லறம் சிறக்க சில இனிய வழிமுறைகள்!

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (குறள்)

இல்வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும், அதனையொத்த நல்ல செயல்களும் தேவை இறைவனின் செயல்பாடுகளையும், அவனின் கருணை உள்ளத்தையும் நம்மால் தெரிந்து கொள்ள முடியாது. காரணம் அதற்குண்டான ஞானத்தை பக்குவத்தையும் நாம் இன்னும் பெறவில்லை. நாம் கேட்பதை உடனே நிறைவேற்றாமல், நமக்கு தேவையான நேரத்தில் நமக்கான நன்மை எதுவோ அதை கடவுள் நிச்சயம் அருள்வார். என்பதை உணரவேண்டும். அவரின் திட்டப்படி எல்லாம் நடந்தது என்றால் அத்தனையும் நன்மையாகவே அமையும். நாம் விரும்புவது போல் நம் எண்ணபடி நடந்தால் நம்மின் வாழ்க்கை சக்கரம் தாறுமாறாக ஓடும் என்பதை நாம் புரிந்துக்கொள்ள வேண்டும்.

நம் வாழ்க்கையை, நமது குடும்பத்தை, குடும்பத்தில் உள்ளவர்களை இந்த உலகம் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகிறது. அதனால் நாமும் தலை தெறிக்க ஓடிக் கொண்டிருக்கிறோம்.

யார் நம்மை அப்படித் துரத்துகிறார்கள் என்று தெரியவில்லை? எதை நோக்கிய ஓடுகிறோம் என்பதும் புரியவில்லை. உட்கார்ந்து சாப்பிட நேரம் கிடைக்கவில்லை. நிம்மதியாக அருகில் உள்ள கோயிலுக்குச் செல்லவோ அங்கு சந்திக்கும் நண்பர்களிடமோ, தோழிகளிடமோ பேசி மகிழ நேரமில்லை. வீட்டிற்கு உறவினர்கள் வந்தால் அவர்களுடன் சேர்ந்து வெளியில் செல்லவோ, பேசி சிரிக்கவோ, நலம் விசாரிக்கவோ நேரம் கிடையாது. ஆடம்பரமான வாழ்க்கை தேவை. தேவையை பூர்த்தி செய்ய பணம் தேவை பணம், பணம்.... அதனை சம்பாதிக்க ஓடுகிறோம். எதற்காக இந்த இயந்திர வாழ்க்கை. கணவனுக்கு மனைவியிடம் பேச நேரமில்லை. மனைவிக்கோ கணவனிடம் பேச நேரமில்லை. பிள்ளைகளுடன் உட்கார்ந்து அரட்டை அடிக்கவோ, விளையாடவோ நேரம் ஒதுக்க முடியவில்லை. நாகரிகமிகுந்த ஆடம்பரமான உலகில் சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடில்லாமல் எல்லாரும் ஓடிக் கொண்டே இருக்கிறார்கள்.

நிழலைக் காட்டி ஏமாற்றும் T.V. சொல்லும் இந்த பேஸ்ட் தான் வாங்க வேண்டும். அந்த சோப்பு தான் குளிக்க வேண்டும். அதனைல் ஏற்படும் பின் விளைவுகள் எதையும் குறித்து கவலை இல்லை. இப்படி ஓடி, ஓடி நமது வாழ்க்கையில் எதை சாதித்தோம் என்று சற்று சிந்தித்து பார்ப்போமானால், உடல் கெட்டு, மனம் நொந்து அறிவு பேதலித்து சோர்வு அடைந்ததுதான் மிச்சம். நிம்மதியாக உட்கார்ந்து ஒரு வாய் சோறு சாப்பிட்டிருக்க மாட்டோம். பதவி ஆடம்பரம் அதிகாரம் இவைப் போன்ற அவலங்களைத் தாண்டி, நம்மை புரிந்து கொண்டு அன்பு செலுத்த, ஆசையுடன் பேச எவராவது கிடைக்க மாட்டாங்களா என்ற ஏக்கம் மனதை வாட்டுகிறது. இதைத்தான் கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்கிறோம். சரி இதன் பிறகாவது மேற்சொன்ன வாய்ப்புகள் கிடைக்கப்பெற்று அமைதிக்கான வழிகளைத்தேடுவோம்என்ற முடிவுககு வருவோம். அந்த நல்ல வாய்ப்பு நமக்கு நிடைக்கப்பெற வேண்டுமானால் நாம் செய்ய வேண்டியது முதலில் மனதில் ஏற்படும் ஆசைகளை ஒழிக்க வேண்டும் இதற்கு மேல் எதுவுமே தேவையில்லை என போதும் என்ற மன நிலைக்கு வர வேண்டும். நம் வாரிசுகளுக்கு நிறைய சொத்து சேர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை விட்டொழிக்க வேண்டும்.

நல்ல முறையில் வளர்த்தோம். படிக்க வைத்தோம், வேலை வாங்கிக் கொடுத்தோம், அவர்கள் காலில் அவர்கள் நிற்கும் அளவிற்கு தயார்படுத்தி விட்டோம். இனி நமக்காக வாழ்வோம் என்ற மன நிலைக்கு வர வேண்டும். மிக மிக முக்கியமான ஒன்று மனதிற்கு அமைதியையும், நிறைவையும் தரும் உண்மையான ஆன்மீகத்தில் மனதை செலுத்த வேண்டும்.

ஆன்மீகத்தில் தான் நமது உண்மையான வாழ்க்கை மலரும். மனம் பரப்பும்! தூய அன்பு இதயத்திலிருந்து வெளிவந்து, குடும்பத்திலுள்ள அனைவரையும் அரவணைக்கும் பண்பு வரும். பிறந்ததின் அடையாளமாக, பலர் வாழ்ந்தும் வகையில் சாதனைகள் புரிந்து, பிறர் வாழ முடிந்த அளவு உதவிகள் புரிந்து, நம்மின் வருங்கால வாரிசுகளுக்கு வழிகாட்டியாய் விளங்கி வாழ்வாங்கு வாழ்ந்திட வேண்டுமென்ற உயர்ந்த எண்ணத்தோடு உங்களின் வாழ்நாள் அமைய முயற்சி செய்து வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ளுங்கள்.

– தொடரும்

வையூர். திலகம்.



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

## பயனற்றது என எதுவும் இல்லை!

குருகுலக்கல்வி முடித்த சீடர்கள் தங்கள் குருவிடம் சென்று,நாங்கள் அனைத்தையும் கற்று முடித்துவிட்டோம், தாங்கள் விரும்பும் பொருளை காணிக்கையாகத் தர விரும்புகிறோம். வேண்டும் பொருளைக் கேளுங்கள் என்றனர். குரு உங்கள் அன்பே போதும் என்றார். சீடர்கள் மேலும் வற்புறுத்தினர். சற்று யோசித்த குரு,சீடர்களே நம் குரு குலத்தின் பின்பாக உள்ள காட்டிற்குச்சென்று எதற்கும் பயன்படாத பொருளை ஒரு கூடையில் கொண்டு வாருங்கள் என்றார். காட்டிற்குள் சென்ற சீடர்கள் அங்கு கீழே கிடந்த சறுகுகளை பயனற்ற பொருளாகக் கருதி கூடையில் நிரப்பத் துவங்கினர். அங்கு வந்த ஒருவன் இச் சருகுகளை நான் அல்லவா எருவாக்கி நிலத்திற்குப் போட்டு பயிர்களை செழிப்பாக்க குவித்து வைத்திருந்தேன் என்றான். இதனை விடுத்து வேறோர் இடம் சென்று வேறொரு மரத்தின் சருகு இலைகளைக் குவிக்க முற்பட்டனர். அங்கு வந்த இரு பெண்கள் இந்த இலைகள் மருத்துவ பயன் மிக்கவை நாங்கள் எடுத்துச்செல்ல இருக்கிறோம் என்றனர்.

ஏமாற்றமடைந்த சீடர்கள் ஒரு குளத்தருகே சென்றனர். குளத்தில் மிதந்த வந்த சில சறுகுகளைக் கண்ணுற்ற சீடர்களில் ஒருவன் இவற்றால் எந்த பயனும் இருக்காது என நினைந்து பொறுக்குவதற்கென கிழே குனிந்தான் .அந்தச் சருகுகளில் எறும்புகள் சில தொற்றிக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். இறுதியாக சீடர்கள் வெறுங்கையுடன் குருவை சென்று பார்த்தனர். குருவே பயனற்றது என்பது எதுவும் இல்லை என்பதைப் புரிந்துகொண்டோம் என்றனர். புன்னகைத்த குரு அதைத்தையும் கற்று முடித்து விட்டோம் என்ற போதே உங்களுக்குத் தற்பெருமை நோய்த் தாக்கியுள்ளது என்பதை அறிந்தேன்.தற்பெருமை இருந்தால் சுயநலம் பெருகும். பொதுநலம் குறைந்துவிடும்.நீங்கள் கற்ற கல்வி எவருக்கும் பயனளிக்காது. நீங்கள் பயனற்றதாக நினைத்த சருகுகள் கூட பல வழிகளில் பயனளிக்கிறது. பகுத்தறிவுள்ள நீங்கள் பிறருக்கு நன்மை செய்து பயனுடையவர்களாக வாழ்தல் வேண்டும் என்ற அறிவுரையைக் கூறி சீடர்களை அனுப்பிவைத்தார்.

## தப்பிக்க நினைக்காதீர்கள்!

ஒரு ஊரில் பெரும் செல்வந்தர் ஒருவர் எங்கு சென்றாலும்பல்லக்கில் செல்வதையே பழக்கமாகக் கொண்டிருந்தார். தனக்கென நான்கு ஆட்களையும் பல்லக்கு தூக்குவதற்கெனவே வைத்திருந்தார்.ஒரு நாள் அந்த செல்வந்தர் வீட்டு பசுமாடு ஒன்று காணாமல் போய்விட்டது. செல்வந்தர் மனைவி பல்லக்கு தூக்கும் ஆட்களிடம் மாட்டினைத் தேடித்தரும்படிக் கூறினார். அவர்களோ அம்மா! எங்களுக்கு பல்லக்கு தூக்கறது மட்டும்தான் வேலை! பசுமாட்டைத் தேடுவது எங்களது வேலையில்லை என்று கூறிவிட்டனர். விஷயத்தைக் கணவரிடம் கூறினார். செல்வந்தரும் அப்படியா கூறினார்கள் ? என்று சற்று யோசித்தார்.சரி நான் பார்த்துக் கொள்கிறேன் என்றவர். பல்லக்கை வரவழைத்து ஏறி உட்கார்ந்தார். பல்லக்குத் தூக்கும் ஆட்களுக்கு உத்தரவிட்டார். இப்ப தெருத் தெருவா போங்க !பசுமாட்டை நான் தேடிக் கொள்கிறேன் என்றார். ஆட்கள் பல்லக்கையும் தூக்கிக்கொண்டு பசுமாட்டையும் தேடுகிறமாதிரி ஆயிற்று. இன்றைக்கு நம்மில் பலருக்கு இத்தகைய மனநிலைதான் இருக்கிறது. எனக்கு சம்பந்தமில்லை என்பதாக சில விஷயங்களில் தப்பிக்க நினைக்கின்றோம். அவ்வாறு தப்பிப்பதற்காக செய்கிற முயற்சியே நம்மை ஒப்புக்கொள்ளவும் செய்துவிடுகிறது.



**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**
மண்ணுக்குள் எந்த அளவு ஆழத்தோண்டிக் கொண்டே
செல்கிறோமோ,அந்த அளவு நீரைப் பெறுவதுபோல , எண்ணரிய
நூல்களுள் மூழ்கும்போதுதான் அறிவுச்செல்வம் பெருகுகிறது.



## ஜோக்குகள்

1. மனநல மருத்துவமனை.தோட்டத்துப் பக்கம்.ஒருவன் கடப்பாரையால் சுவரைப் பெயர்த்துக் கொண்டிருந்தான்.
   என்னப்பா செய்யறே ?
   உஸ்! சத்தம் போடாதீங்க! இங்கேயிருந்து தப்பிச்சிப்போக முயற்சி பண்றேன்! அதுக்குத்தான் வாசல் கேட் இருக்கே ?
   அது எனக்குத் தெரியாதா ? ஆனா அது கிறீச் கிறீச்னு சப்தம் போடுமே!
2. இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார் ஒருவர்.பயணச்சீட்டுப் பரிசோதகர் திடீர் என்று எதிரில் வந்து நின்றார். எங்கே டிக்கெட் ? என்றார்.
   இவர் எதையோ வாயில் கவ்வியபடி தன் கையிலும் பெட்டியிலும் டிக்கெட்டைத் தேடிக்கொண்டிருந்தார்.
   எதிரில் இருந்தவர் ,என்னங்க இது டிக்கெட்டை வாயிலே கவ்விக்கிட்டு எங்கெல்லாமோ தேடுறீங்க ? என்றார்.
   ஓ...மன்னிக்கவேண்டும் ! என்றபடி டிக்கெட்டை எடுத்து நீட்டினார்.பரிசோதகர் அதில் கையெழுத்தை போட்டுவிட்டு அடுத்த பெட்டியை நோக்கிப் போய்விட்டார்.
   இப்போது எதிரில் இருந்தவர்: என்னங்க ...அவ்வளவு ஞாபக மறதி ?
   ஞாபக மறதி இல்லீங்க..ஞாபகத்தோடுதான் டிக்கெட்டிலிருந்த தேதியைக்கடித்து மென்றுவிட்டேன்.இது நேற்றைய டிக்கெட் !.
3. ஒரு நபர் வீட்டு வாசலின் முன்பாக நின்று தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தார்.
   அவரது நண்பர் கேட்டார்.ஏன்யா அழுறே ?....
   அதற்கு அவர்சொன்னார்....என் மனைவி 5 வருஷம் என்கூட பேசமாட்டேன்னு சபதம் போட்டுட்டா சார்!
   அதுக்குப் போய் யாராவது அழுவாங்களா ?
   சார் நான் அதுக்காக அழுலே .அந்த 5வருஷ கெடு இன்னையோட முடியப்போகுது சார்! என்று சொல்லிவிட்டு மீண்டும் விம்மி அழ ஆரம்பித்தார்.

## நடராஜர் நமக்கு உணர்த்துவதென்ன?



நமது கலாசாரமும் நடனமும் உடன் பின்னிப் பிணைந்தவை. பரதம், குச்சுப்பிடி, ஒடிசி, மோகினி ஆட்டம் எனப் பல வேர்கள் விட்டது இந்திய பூமியில்தான். நடராஜர் நடனத்தில் பல அர்த்தங்கள் வெளிப் படுத்தப்படுகின்றன. இதில் முக்கியமானது. நம்மை உற்சாகம் இழக்கச்செய்வது எதுவோ! அதை அழிப்பது என்பதாகும். நமது உத்வேகத்தை,தன்னம்பிக்கையை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி எது? சோம்பல், சுய பச்சாதாபம் முதலியவைதானே! இவற்றை அழிக்கவேண்டும். நடராஜர் சிலை உணர்த்துவதும் இதைத்தான்.

நடராஜர் காலடியில் கிடக்கும் அரக்கன் உற்சாகத்தை நம்மிடமிருந்து பறிக்கும் சக்தி, நடராஜர் கையில் உள்ள தீ சுவாலை அறிவைத்தான். நமது வேதங்கள் தீ என்று சிம்பாலிக்காகக் கூறுகின்றன.துறவிகள் நெருப்பின் வண்ணத்தில் இருக்கும் காவி உடைஅணிவதும் இதன்காரணமே! மறுகையில் உள்ள உடுக்கை ஞானத்தைக் குறிக்கும். மூன்றாவது கைகாட்டும் அபய முத்திரை பயமின்றி வாழ் என்று பொருள். நம்மைத் தாழ்மைப்படுத்தும் அரக்கன் என்ற சக்தியை அழித்தால் துள்ளித் துள்ளி நடனமாடும் அளவுக்கு நமக்கு உற்சாகமும்பிறக்கும், மகிழ்ச்சியும் பிறக்கும்.

நடராஜர் மாதிரி தன்னைத்தானே புரிந்துகொண்டு,முழு ஞானத்தோடு நம்மைத் தாழ்மைப் படுத்தும் சக்திகளை வீழ்த்தி அதன்மேல் ஏறிநின்று நாம் நடனமாடினால் நடனமாடுபவர் கண்ணுக்குத் தெரியமாட்டார். நடனம் மட்டுமே கண்ணுக்குத்தெரியும். எனவே ஆங்கிலத்தில் சொல்வதானால் “ Don’t dance for happiness. Dance out of happiness ”

## எறும்பிடம் கற்றுக்கொள்வோம்



ஓர் எறும்பு தன்னைவிட மூன்று மடங்கு நீளமான புல் துண்டு ஒன்றை சிரமப்பட்டு இழுத்துச்சென்றது.வழியில் ஒரு பள்ளம்...அதைத் தாண்டிச் செல்வது கடினம்.புல் துண்டோடு ஏறி இறங்குவது சிரமம்.எறும்பு யோசித்தது.புல்துண்டை வைத்துப் பின்புறம் நின்று தள்ளியது. புல் ,பாலமாகியது.எறும்பு அதன்மீது ஊர்ந்து சென்றுஅடுத்தபக்கம்சென்றது.மறுபடியும் அதை இழுத்துக் கொண்டு முன்னேறியது.

ஓர் எறும்பு தன்சுமையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறது.மனிதன் சிந்தித்தால் தன் பிரச்சனையைக் கூட தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்!

**வழக்கறிஞர்களுக்கு முன்மாதிரி**



சர்தார் வல்லபாய் பட்டேல் விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக ஈடுபடுவதற்கு முன்னால் நீதிமன்றத்தில் சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். நேர்மைக்கு மட்டுமே வாதாடிவந்த இவர் வாதாடும் திறன்படைத்தவர். ஒருசமயம் அவரது மனைவியார் வீட்டில் உடல் நலமில்லாதிருந்தபோது ஒரு முக்கியமான வழக்கில் ஈடுபடவேண்டியதாயிற்று. நீதிமன்றத்தில் குறிப்பிட்ட வழக்கு விசாரணை ஆரம்பமானது. பட்டேல் பல்வேறு சாட்சியங்களையும் முக்கிய குறிப்புகளையும் நீதிபதியிடம் தந்தபடியிருந்தார். அப்போது திடீரென ஒரு தந்தி வந்தது. ஒரு நிமிடம் அதனைப்படித்துப் பார்த்துவிட்டு அவர் மீண்டும் தன் வழக்கில் கவனம் செலுத்தினார். அன்றைய வழக்கில் பட்டேலின் வாதிடும்திறன் சிறப்பாக இருந்தது. நீதிமன்ற நேரம் முடிந்ததும் உடன் வழக்கறிஞர்கள் பட்டேலைப் பாராட்டினர்.பின்பு ஒருவர் மட்டும் தனியே பட்டேலிடம் உங்களுக்குத் தந்தி வந்ததே என்ன விபரம் என்று கூறமுடியுமா? எனக்கேட்டார். உடனே பட்டேல் அது வேறு ஒன்றுமில்லை என் மனைவி இறந்துவிட்டார் எனக்கூறினார். அனைவரும் திடுக்கிட்டனர் அப்படி இருக்க ஏன் அங்கு செல்லாமல் இங்கு நின்று வாதாடிக்கொண்டிருந்தீர்கள் எனக்கேட்க இறந்த மனைவியை இனி நான் காப்பாற்ற முடியாது. ஆனால் உயிரோடு இருக்கும் எனது கட்சிக்காரரை நான் காப்பாற்றலாம் அல்லவா ?என்பதால்தான் வாதத்தைத் தொடர்ந்து முடித்தேன் என்று கூறினாலும் மனைவியின் மறைவிற்காக அவரது கண்கள் கலங்கின. வழக்கறிஞர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

**மகிழ்ச்சி என்பது**

கடற்கரையொன்றில் சந்நியாசி ஒருவர் கை கால் நீட்டி ஹாயாகப் படுத்திருந்தார். அவ்வழியே வந்த வியாபாரி இதனைப்பார்த்து ஒவ்வொருவரும் காற்றாகப் பறந்து வேலைசெய்துகொண்டிருக்க நீ மட்டும் ஏன் வெட்டியாகப்படுத்துக்கொண்டிருக்கின்றாய்? என்று கேட்கிறான். அதற்கு சன்னியாசி, வேலைசெய்தால் என்ன பலன் ? என்றான். வேலை செய்தால் நிறைய பணம்கிடைக்குமே பணம் கிடைத்தால் ! வீடு மற்றும் வசதிகளைத் தேடிக்கொள்ளலாம். வீடு வசதிகள் கிடைத்தால் கை கால் நீட்டி நிம்மதியாக படுத்துத் தூங்கலாமே! சிரித்துக்கொண்டே சந்நியாசி சொன்னார்சரிதான் இப்போதும் அதைத்தானே செய்து கொண்டிருக்கின்றேன். இந்தக்கதையை நிறையபேர் தப்பாக அர்த்தம் செய்து கொள்வார்கள். உழைக்காமல் சோம்பேறித்தனமாக இரு என்று போதிப்பதற்காகச் சொல்லப்பட்டக் கதையல்ல இது. மகிழ்ச்சியும், நிம்மதியும் பணத்தாலும், வீடு வசதிகளாலும் மட்டும் கிடைப்பதில்லை !

மகிழ்ச்சி என்பது நமது பார்வையில்தான் இருக்கிறது என்பதை விளக்கிச் சொல்வதுதான் இந்தக் கதை !

***விடா முயற்சி:***

தோல்வியை சந்திக்காதவர்கள் எதையுமே தொடங்காதவர்கள்.அவர்களுக்குத் தோல்வியே இல்லை. அதுபோல வெற்றியும் இல்லை.தோல்வியைச் சந்திக்கிறவர்கள் எதையோ தொடங்கியிருக்கிறார்கள்.அதனால் முதலில் தோல்வி அவர்களுக்கு வந்திருக்கலாம்.தொடர்ந்து செய்தால்விடாமல் முயற்சி செய்தால் தோல்வியே தோற்றுப் போகும். வெற்றி என்கிற பலன் கிடைத்தே தீரும். சாதனை என்பது ஓர் அதிசயம் அல்ல. விடாமுயற்சியின் விளைச்சல்தான் என்றே புலப்படுகிறது.

– பராக் ஒபாமா

***சிறுவர்களே !***

நீங்களும் உங்களதுபிறந்த நாளை முதல் மார்தம் 25 தேதிக்குள்ளாக: தந்தை /காப்பாளர் முகவரி, புகைப்படத்துடன் தெரிவிக்கலாம்! கட்டணம் ஏதும் இல்லை! நாங்கள் வாழ்த்து தெரிவிக்கின்றோம்



## மேதைகளின் வாழ்வில் சில சுவையான சம்பவங்கள்



### இராஜ கோபலாச்சாரியார்

இராஜாஜி சென்னையில் விவேகானந்தர் மாணவர் இல்லத்தில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தார்.அங்கு வந்த விவேகானந்தர் மாணவர்களிடையே இந்தக் கேள்வியை எழுப்பினார்,கண்ணன் ஏன் நீல வண்ணமாக இருக்கிறார் ?

இக்கேள்விக்கு இராஜாஜி பொருத்தமான பதிலைச் சொன்னார்.வானமும் கடலும் நீல நிறம். அவை எல்லை யற்றவை. கண்ணனும் எல்லையற்றவர். அதனால்அவர் வண்ணமும் நீலம் என்பதே. இதனைக்கேட்ட விவேகானந்தர் இராஜாஜியை பாராட்டி எதிர் காலத்தில் இவர் சிறந்து விளங்குவார் என அன்றே கூறினார்.அதுவே நடந்தது. உலகப்புகழ் பெற்றார்.



### கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்

பள்ளிக்கூட விழாவில் பேசச்சென்ற கலைவாணர், ஒரு ஊர்ல ஒரு முயலும் ஆமையும் இருந்துதாம் என்று ஆரம்பித்தார். குழந்தைகளெல்லாம் தெரியும்! தெரியும்! எனஆரவாரமாக சப்தமிட்டார்கள். உடனே கலைவாணர் சரி என்ன தெரியும்? சொல்லுங்கள் என்றார். ரெண்டுக்கும் போட்டி நடந்தது. சரி . எது ஜெயிச்சுது? என்றுகேட்டார். ஆமை ஜெயித்தது, முயல் தோற்றது என்றனர் பிள்ளைகள். அதற்குக் கலைவாணர் அப்படிச் சொல்லக்கூடாது.முயல் ஆமையால் தோற்றது. எங்க சொல்லுங்க முயல்+ஆமையால் தோற்றது.முயல்+ஆமை=முயலாமை.முயலாமை என்பது முயற்சி செய்யாமை.முயற்சி செய்யாதவர்கள் வலிவானவர்களாக இருந்தாலும் தோற்றுத்தான் போவார்கள் .அதுக்குத்தான் இந்தக்கதையில முயலும்,ஆமையும் போட்டி போட்டதா காட்டுறாங்க இல்லையா! என்றார்.



### ஜி.டி.நாயுடு

உலக அரங்கில் தமிழ்நாட்டை உயர்த்த நினைத்த அறிவியல் மேதை,உழைப்பின் சிகரம் ஜி.டி.நாயுடு பற்றி அறியாதோர் இருக்க முடியாது. அவர் ஒரு முறை பழைய இரும்பினை விலைக்கு வாங்கித் தம் மாணவர்களைக் கொண்டு உருவாக்கிய 32 பஸ்களை பள்ளிகளுக்கு இலவசமாக அளித்தார். இலவசமாக அளித்த பஸ்களுக்கு பதினைந்துலட்ச ரூபாய்வரி செலுத்துமாறு வருமான வரித்துறையினர் கேட்டனர். இலவசமாக அளித்த பஸ்களுக்கு வரி செலுத்த மறுத்தார் என்பதற்காக அவரது வீட்டினை ஜப்தி செய்ய அரசு உத்தரவிட்டது. தன்மானம் கொண்ட விஞ்ஞானிக்கா வழி தெரியாது ?மூளையைப் பயன் படுத்தினார்.தன் மனைவி பெயருக்கு அத்தனை சொத்துக்களையும் எழுதிவைத்தார். மனைவியை பெயரளவில் விவாகரத்து செய்தார். அரசு நடவடிக்கைக்குத் திணறியது.



### சுவாமி விவேகானந்தர்

விவேகானந்தரைசந்தித்தவன்சுவாமி! குழந்தை உருவாகதந்தையும் தாயும் காரணமாக இருக்கும்போது தாயை மட்டும் போற்றுகிறார்களே ஏன் ? என்றுகேட்டான்.அவனிடம் விவேகானந்தர்அதோ அங்கே இருக்கும் கல்லை எடுத்துவா! என்றார்.அவனும் அந்தக் கல்லைத் தூக்கி வந்தான்.அது இரண்டு கிலோ எடை கொண்டது. இந்தக்கல்லை உனது மடியில் நான்கு மணி நேரம் கட்டிக் கொண்டிருந்து விட்டு பிறகு என்னிடம் வா!என்றார் விவேகானந்தர்.

அவனும் அந்தக் கல்லைக் கட்டிக் கொண்டிருந்தான். அவனுக்குச் சிரமமாக இருந்தது. எழுந்து போனான்,சுவாமிஎன்னால்இந்த பாரத்தைத் தாங்க முடியவில்லைஎன்றான்.

விவேகானந்தர் புன்னகையுடன் தொடர்ந்தார்.இந்த இரண்டு கிலோ கல்லை உன்னால் நான்கு மணி நேரம் கூட வைத்திருக்க முடியவில்லை.ஆனால் ஒரு தாயானவள் ஏறக்குறைய பத்து மாதங்கள் குழந்தையை சுமக்கிறாள்.அலுத்துக்கொள்கிறாளா ? இப்போது புரிகிறதா ? தாய்க்கு முக்கியத்துவம் ஏன் என்று ?

## சிறுதானியங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

ஆரோக்கியமான உணவுகளில் முக்கிய இடத்தை பிடித்துக் கொண்டவை சிறு தானியங்களாகும். இது பாரம்பரிய உணவு முறைகளின் ராஜாவாக இடம் பெறுவதோடு பல்வேறு நன்மைகளையும் தன்னகத்தே கொண்டு காணப்படுகிறது. அந்த வகையில் ஊட்டச்சத்தில் பிரதான பங்கினையும் சிறு தானியங்களே வகிக்கின்றது. நமது ஆரோக்கியத்தினை மேம்படுத்துவதற்கானதோர் உணவுகளாக விளங்கும் சிறு தானியங்கள் பற்றி இக்கட்டுரையில் நோக்கலாம்.



நம் முன்னோர்களால் ஆதி காலத்திலிருந்தே உண்ணப்பட்டு வந்த ஆரோக்கியமான உணவில் முதல் இடத்தைப் பிடிப்பவை சிறுதானிய வகைகளான குதிரைவாலி, கேழ்வரகு, திணை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் போன்றவை தான். அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானியங்கள் ஏழைகளின் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலை மாறி, சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது.

**மருந்தாகும் சிறுதானிய உணவுகள் :**

உடலுக்குநல்லதுஎன்றுபலஉணவுவகைகளைப் பயன்படுத்தும் நாம், சிறுதானிய உணவுகளை உண்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டோம். ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்துச்சத்துக்களும் சிறுதானியங்களில் உள்ளன. சிறுதானியங்களில் நார்ச்சத்து, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது சத்துக்கள் அதிகமாகக் காணப்படுவதால் நாம் உண்ணும் போது நம் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப் பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.

இதிலுள்ள மாவுச் சத்து மெதுவாகச் செரிமானமாவதும் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு ஆகும்.

சிறுதானியங்களில் உள்ள லிக்னின் என்ற பொருள் மருத்துவக் குணம் உடையது. இது குடல் சுத்தமாவதற்கு மிகவும் உதவுகிறது. மாதவிடாய் பிரச்சினை,இதயநோய்,ரத்த அழுத்தம்போன்றவற்றைச் சீராக்கும் வல்லமை சிறுதானிய உணவுக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஆஸ்துமா, தும்மல் போன்ற பிரச்சினைகள் வராமல் சிறுதானியங்கள் தடுக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள பாஸ்பரஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் உடல் செல்களை உறுதிப்படுத்தி எலும்புகளுக்கு உறுதி அளிக்கின்றன.

**சாகுபடிக்கேற்ற சிறப்பியல்புகள் :**

சிறுதானிய சாகுபடியால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவைநம்முடைய சூழலுக்கு எவ்வாறு ஏற்றதாக உள்ளன என்பது பற்றியும் பெரும் பகுதியினருக்குத் தெரிவதில்லை. சிறுதானியங்கள் எளிதாக அனைவரும் சாகுபடி செய்ய ஏதுவான பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. நெல் விளைவதற்கு 120 – 180 நாட்கள் மற்றும் அதிக அளவு தண்ணீர் (1,000 மி.மி) தேவைப்படும். ஆனால், சிறுதானியங்களுக்கு குறைவான அளவு தண்ணீர் (250 – 400 மி) இருந்தாலே போதுமானது.

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அதாவது 65–90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரக்கூடியவை. மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம். மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்றவை. வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை. சிறுதானியங்கள் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதல் மிகக் குறைவு. மற்ற பயிர்களுக்குக் கொடுப்பதைப் போல அதிகமான ஊட்டத்தை சிறுதானியப் பயிர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை.

அர்ச்சனா சுவேதாரண்யம், பெசண்ட் நகர், சென்னை

– (தொடரும்)

## பக்திக்கு வந்த சோதனை

பாண்டுரங்களைப் புகழ்ந்து பாடும் எண்ணற்ற சந்த்கள் வாழும் பண்டரிபுரத்தில் வாழ்ந்த ஒரு பாண்டுரங்க பக்தர் கோராகும்பர். இவர் மண்பாண்டங்களைச் செய்யும் குயவர் வகுப்பைச் சேர்ந்தவர். தன் வீட்டில் நடக்கும் பஜனைக்கு வரும்படி நாமதேவ், விமூர்த்திநாதர், முக்தா பாய் போன்ற பல பக்தர்களையும் அழைத்தார்.

எல்லோரும் கோராகும்பரின் வீட்டுக்குச் சென்றனர். பஜனை நடந்து கொண்டிருக்கிறது. முக்தா பாய், மண் பாண்டங்கள் செய்யும் பகுதிக்குச் சென்றுவிடுகிறாள். அங்கிருந்த ஒரு கட்டையைஎடுத்து, ''இது என்ன கட்டை'' என்றாள் கோராகும்பரிடம்.

''இது மண்பாண்டங்களைப் பதம் பார்க்கும் கட்டைம்மா'' என்றார் கோராகும்பர்.

''அப்படியானால் இந்தக் கட்டையால் பஜனை செய்து கொண்டிருப்பவர்களின் தலையில் அடித்தால் அவர்கள் வெந்துவிட்டார்களா என்று தெரிந்துவிடும்தானே'' என்றாள் முக்தாபாய்.

''அய்யய்யோ இதென்னம்மா விபரீத விளையாட்டு...'' என்று மனம் பதைத்தார் கோராகும்பர்.

''பதட்டப்படாமல் என்னோடு வாருங்கள்'' என்றாள் சக்தியின் அவதாரமாக மதிக்கப்படும் முக்தாபாய்.

இருவரும் பஜனை நடந்து கொண்டிருக்கும் கூடத்துக்கு வருகிறார்கள். முதலில் விமூர்த்தநாதரின் தலையில் 'நங்' கென்று கட்டையால் அடிக்கிறாள் முக்தாபாய். 'அரி' ராதேகிருஷ்ணா' என்றார். அடுத்து, நாம்தேவின் தலையில் அடிக்கிறாள். முக்தாபாய் அடி விழுந்ததும்.... 'யாரது என்னை அடித்தது ?' என்று கோபமாய் வெகுண்டெழுந்தார் நாம்தேவ்.

'இந்தக் கட்டை வேகலை' என்றாள் முக்தா பாய்.

தன்னுடைய பக்திக்குச் சோதனையா என்று தன் நண்பன் பாண்டுரங்கனிடமே நியாயம் கேட்டார் நாம்தேவ்.

''உனது பக்தியை நான் அறிவேன். ஆனாலும் உனக்கு குருபக்தி பூர்வமான ஞானம் வேண்டும்'' என்றான் பாண்டுரங்கன் நாம்தேவின் தலைக்கனம் மறைந்து விடோபாகேசரை தனது குருவாகக் கொள்கிறார்.

பக்தியின் படிக்கட்டான நாம்தேவ்

நாம்தேவின் பக்தியை மெச்சி வைகுண்டத்துக்கே என்னோடு வந்துவிடு என்கிறான் பாண்டுரங்கன் ஆனால் அதை மறுத்த நாம்தேவ். ''உன்னை பக்தியோடு காணவரும் பக்தர்கள் மிதித்துவிட்டுச் செல்லும் வகையில் உன் ஆலயத்தின் படிக்கட்டுகளாக நான் ஆக வேண்டும் என்றார். அப்படியே நாம்தேவ்க்கு அருள்பாலித்தாராம் பாண்டுரங்கன்.

''நாம்தேவ் கீர்த்தன கரி பிரேமபர நாச்சே பாண்டுரங்கா''– ஞானி நாம்தேவர்

**(29 அக்டோபர், 1270 – 1350)**

நாம்தேவர் **13–ம்** நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு வர்க்காரி வைணவத் துறவி இவர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ள இங்கோலி மாவட்டத்தில், நர்சி பாமனி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவருடைய தந்தை தாம்சேட் ஒரு தையற்கலைஞர். இவருடைய தாயார் கோனாபாய்.

இவருடைய சமயக்கருத்துக்கள், வாழ்க்கையை வாழும் முறை பற்றியும், திருமணத்தின் மூலமும் குடும்ப பொறுப்பு ஏற்பதின் மூலமும் ஒருவர் வாழ்க்கையில் தெளிவு பெறலாம் என்னும் கருத்தை வலியுறுத்தின. இவர் பண்டரிபுரத்தில் வாழ்ந்து பகவான் விட்டலரின் பெரும் பக்தனாக வாழ்ந்தவர். விட்டலர் மீது பல பதிகங்களைப் பாடியவர் இவரது பாடல்களில் சில சீக்கியர்களின் குருகிரந்த் சாகிப் நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவரது சீடர்களில் ஒருவர் ஜனாபாய் ஆவார்.

கிருத யுகத்தில் பிரகலாதனாகப் பிறந்து நாராயணனின் அருளைப் பெற்றவர்தான் கலியுகத்தில் நாம்தேவாக அவதரித்தார் என்பார்கள். ஒரு சமயம் நாம்தேவின் தந்தை பாண்டுரங்கனுக்கு நைவேத்தியம் படைத்துவிட்டு, 'இது பாண்டுரங்கனுக்கு' என்று சொன்னாராம் அப்போது நாம்தேவ் ஐந்து வயதுச் சிறுவன் தந்தை சொன்னதை அப்படியே நம்பிவிட்டான்.

''பாண்டுரங்கா உனக்குத்தான் வந்து சாப்பிடு'' என்றான்.

''பாண்டுரங்கன் வரவில்லை.

இரண்டு முறை, மூன்று முறை, பலமுறை கூப்பிட்டும் பாண்டுரங்கன் வரவில்லை தான் கூப்பிட்டு பாண்டுரங்கன் வரவில்லையே என்ற கோபம் நாம்தேவுக்கு ஏற்படுகிறது.

''பாண்டுரங்கா நீ இப்போது சாப்பிடாவிட்டால், உன் மீதே மோதி என் மண்டையை உடைத்துக் கொள்வேன்'' என்றான் சிறுவன் நாம்தேவ்.

அப்போதும் பாண்டுரங்கன் வரவில்லை. மனம்

வெறுத்துப் போன நாம்தேவ், பாண்டுரங்கனின் சிலை மீது முட்டிக்கொள்ள முயன்றான். உடனே நாம்தேவின் முன்னால் தோன்றி அவனை அரவணைத்துக் காக்கிறான் பாண்டுரங்கன்.

நாம்தேவ் ஊட்டிவிட பாண்டுரங்கன் சாப்பிடுகிறான். பாண்டுரங்கன் ஊட்டிவிட சிறுவன் நாம்தேவ் சாப்பிடுகிறான். அன்றிலிருந்து இருவரும் இணைபிரியா நண்பர்களாகின்றனர். நைவேத்தியம் செய்த பிரசாதம் எங்கே என்று பெற்றோர்கள் கேட்டதற்கு பாண்டுரங்கனும் தானும் உண்டதாக கூறினான் சிறுவன். இது உண்மையா என்று அறிய அவர்கள் மறுநாள் கோவில் சென்றனர்.

நாம்தேவின் உன்னத பக்தியால் அவரின் பெற்றோர்களும், பாண்டுரங்கனை தரிசிக்கும் பேறு பெற்றனர்.

எண்ணற்ற பாடல்களை நாம்தேவ் எழுதிப் பாடி பாண்டுரங்கனுக்கு தினம் தினம் பாமாலை சூட்டினார்.

– லலிதா வேலாயுதம்.

## மெய்கண்டார் வரலாறு.

''சிவஞான போதம் அருளிய மெய்கண்டார்''

தமிழினம் உலகுக்கு அளித்த பெருங்கொடை தமிழகத்தின் நடுநாட்டில் உள்ள தூங்கானை மாடம் என்னும் பெண்ணாகடத்தில் கார்காத்தார் குலத்தில் பிறந்த மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம்.

உலகுக்கு இறை உயிர், தளை என்னும் பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மையை அவற்றின் அத்துவிதத் தொடர்பை நிலை நிறுத்தும் உண்மை நூல் அது. சுருங்கிய சொற்களால் எல்லாக் கருத்துக்களையும் விளக்கும் பெரு நூல் அது. அருட்குரவர் மெய்கண்டாருக்கு முன் தோன்றிய அருளாளர்கள் நிறுவிய சங்கரரின் அத்வைதம், மத்வரின் துவைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றின் கொள்கைகளில் நிலவிய மாறுபாடுகளை நீக்கி, உலகே வியக்கும் வண்ணம் 800 ஆண்டுகளாக மறுப்பே இல்லாமல் ஏற்கப்பட்டுள்ளதும், முதன் முதலில் தமிழில் தோன்றியதுமான வாழ்வியல் நெறி காட்டும் நூல் எனும் கூறுவர் ஆன்றோர். ஆம்

''பிறப்பென்னும் பேதைமை நீங்க சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு'' 358

என்று வள்ளுவர் கூறும் அந்த அறிவைக்கொடுப்பது சிவஞானபோதம் என்றால் மிகையாகாது.

ஆங்கிலேயர்கள் ஜெர்மானியர்கள் உட்பட பலராலும் இந்தியாவின் தலையாய தத்துவ நூலாக போற்றப்பட்ட வாழ்வியல் நூலாகவும் முப்பொருள் உண்மையைக் கூறும் முதல் நூலாகவும் சித்தாந்த கருத்துக்களை செம்பொருள் துணிபாகக் கூறும் அந்த மகத்தான நூலை அருளியவர் மெய்கண்டார்.

அன்னாரது நூற்றாண்டை (1925 – 2025) ஒட்டி வெளியிடப்பட்டது. மேலும் சிறப்பு.

''அமரர் வழக்கறிஞர் பெண்ணாடம் குருகுலராய அரங்கசாமி பிள்ளை'' இத்தகைய சிறப்பான நூலை வெளியிட்டு சைவ சித்தாந்தம், கார்குலம் மற்றும் பெண்ணாடத்தின் பெருமை என்றும் நிலைக்கும் வண்ணம் மெய்கண்டார் வரலாற்றை உலகுக்கு அளித்த வழக்கறிஞர் அரங்கசாமி பிள்ளையின் வழித்தோன்றல்கள் அனைவரும் இறையருளும் குருவருளும் என்றும் பெற்று வாழ்க வளமுடன். இந்த நூலை நம் கார்குலத்தின் பொக்கிஷம் என்றால் மிகையாகாது. ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி!

வாழ்க கார்குலம்!

ஓங்குக மெய்கண்டார் புகழ்! வளர்க சைவ சித்தாந்தம்!

– இராம குஞ்சிதபாதம், சென்னை–85.

9840429079

## ''பென்ஷனர் - பேமிலி பென்ஷனர் கவனத்திற்கு''

ஒய்வூதியருக்கு 80 வயது நிறைவு பெறும் மாதத்தின் முதல் நாளிலிருந்து 20% கூடுதல் பென்ஷன் வழங்கப்படுகிறது.

ஒரு சிலர் கணவன் / மனைவி இருவரும் பென்ஷன் பெறுவார்கள்.

இருவரில் ஒருவர் காலமானால் அவரது பென்ஷன் மற்றவர்க்கு பேமிலி பென்ஷனாக கணக்கிட்டு பென்ஷன் பெறுபவருக்கு வழங்கப்படும். அப்படி வழங்கிடும் போது ஒருவர் இரண்டு பென்ஷன் பெறுவார்கள்.

அவ்வாறு பென்ஷன் பெறுபவருக்கு 80 வயது நிறைவான மாதத்தின் முதல் நாளிலிருந்து 20% கூடுதல் பென்ஷன் பெறுவார்கள்.

பென்ஷன் பெறுபவர் தனது ஆதார் / பேன் பென்ஷன் புத்தக முதல் பக்கம் / வங்கி பாஸ்புத்தகம் முதல் பக்க நகல் எடுத்து விண்ணப்பம் எழுதி கொடுத்தால் வழங்குவார்கள்.

இதை படிப்பவர்கள் உறவினர் நண்பர்களுககும் தெரிவியுங்கள். பயன் பெறட்டும்.

- P.G. இராமலிங்கம்,
சிதம்பரம்.
9842054106

## வணங்கி வாழ்த்தித் தாள்பணிந்து போற்றுகிறோம்.

கார்குலம் காக்கவந்த கதிரவன் இவர்
கார்குல இளைய சமுதாயம் கல்வியால்
உயர்வுற்றபோதும் சமுதாய கூட்டமைப்பில்
சாதியவர்ணத்தால்
உயர் நிலை அளவுகோலால் கல்வியின்
படிநிலைகளில்
பாதம்பதிக்க பொருளாதாரக் சறுக்கல்
இடைச்செறுக்கலாய்
பயணிக்க கல்லூரிப் படிக்கட்டுகளில் அரசாங்கத்தின்
அத்தனை சலுகையும்மறுக்கப்பட எமைக்காத்து
கரையெற்றும் தோணியாய் காத்திட்ட
தோணியப்பர்யிவர்
எம்சமுதாய சவால்களை வேரோடும் வேர்அடி
மண்ணோடும்
சாய்த்திட்ட சமுதாயப்போராளி!
கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை
இனிஇல்லை ஒத்துக்கொள் என்ற பைந்தமிழ்
பாவலன் பாரதியின் வரிகளுக்கு வலுசேர்க்கும்
விதமாக
கால்நடை வளர்த்து தற்சார்பு பொருளாதாரம் மேம்பட
மகளிர்க்கு வட்டி இல்லா கடனாய் வாரிவழங்கிட்ட
வள்ளல்யிவர் கற்று, கல்லூரியில் பட்டம், பொறியியல்
பட்டம்
பெற்ற வேலை யில்லா அத்துணை
கார்க்குல இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு
அளித்து
உண்டு உறைவிடம் தந்து ஆபத்துக் காத்தவனாய்
இராதா இன்ஜினியரிங் எனும் தாக்கிடும்
ஆலமரமாய் அமுதசுரபியாய் எம் குலம் காக்கும்
கார்குலக்கடவுளே. அகவை80 ல்
தளம் பதிக்கும் பெருமகனே!!
எம் கார்குலம் எழுச்சி பெற
தாங்கள் வாரி இறைத்த செல்வம் கணக்கில்
அடங்கா!!!
ஆண்டுதோறும் கல்விக்கண் திறக்க
இளைஞர் சமுதாயம் ஏற்றம் பெற
வற்றாது வாரிவழங்கிட்ட செல்வம்
சில பலகோடி, எனினும் ஈட்டலின்பயனே ஈதல்
என்ற பெரும் பாட்டன் வள்ளுவன் வழி
தடம்பதிக்கும் பெருமானே வணங்கிப் போற்றுகிறோம்.
வெள்ளுடைவேந்தராய்
பூவிழுந்த நல்லூர்வாழ் கார்குலக் கர்ணனே
வெங்கடேசம் பிள்ளை* என்ற திருப்பெயரால்
எம் உள்ளங்களில் என்றென்றும் வாழும்
பரம்பொருளே! பாதம்பணிந்து போற்றி
வாழ்த்துகிறோம்
வாழ்க பல்லாண்டு!! செய்பணியால்
சிறக்க நூறாண்டு!!!

– இராம. ஆனந்தன்,
மயிலாடுதுறை.

## ஜப்பானில் நான்

(தொடர்ச்சி)

கண்ணாடி அறையில் பூக்களை ரசித்து, 2300 அடி உயரம் உள்ள Mt Fuji சென்றோம். மலை ஏறும் போது ஓரிடத்தில் அமைதியாக இருக்குமாறு கூற, அவ்விடத்தில் ஒரு மென்மையான இசையின் ஓசை கேட்டது. கார் டயர் அந்த இடத்தில்பட்டதும் ஏற்படும் 'வைபரேஷன்' என்றனர். அது எதுவாயினும், ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது. மேலே மிதமான குளிரும், அழகிய சூழலும் மனதிற்கு இதமாக இருந்தது.

அடுத்து நாங்கள் சென்றது 'அவகுதானி' பள்ளத்தாக்கு. (Owakudani Valley). அந்த மலையில் புகை வந்து கொண்டே உள்ளது. சல்ஃபர் படிமங்களினால் புகையும், வெடி மருந்து வாடையும் அவ்விடத்தில் இருந்தது. அம்மலையிலிருந்து rope car வழியாக 2. கி.மீ பயணித்து கீழே வந்தோம். வரும் வழியில் அப்பள்ளத்தாக்கைக் காண, அது ஒரு கண்கொள்ளாக் காட்சி. அத்தனை பசுமை; அழகு! கீழே ஒரு Lake Ashicruise-ல் அதாவது ஒரு சிறிய கப்பலில் அங்கிருந்த ஏரியில் பயணித்தோம். ஏரி அத்தனை சுத்தம்! பெருமூச்சுதான் விட முடிந்தது; நமது நாட்டின் ஏரி, நதி, குளங்களை நினைத்து!

அடுத்து டோக்கியோ Sky Tree சென்றோம்.

இது 2012–ல் கட்டப்பட்ட உயரமான டவர். அதில் 350 மீட்டர் வரை சென்று டோக்கியோ நகரினை ரசித்தோம். இங்குள்ள கண்ணாடி தரை வழியாக குனிந்து பார்த்தால் டவர் முழுவதும் தெரிகிறது. அடுத்து நாங்கள் சென்றது இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா அணுகுண்டு வீசி அழித்த ஹிரோஷியா. முதலில் ஒரு பெரிய படகில் Miyagima தீவு சென்றோம். ஜப்பானின் புராதன சின்னமான புத்தர் கோயில் சென்றோம். இங்கும் உருவ வழிபாடு இல்லை. அக்கோயிலில் அவர்களின் புராதன நடனத்தையும் கண்டு களித்தோம். கடற்கரையின் அழகையும், அங்கிருந்த மான் கூட்டங்களையும் கண்டு ரசித்தோம். அடுத்து அணுகுண்டு விழுந்து நாசமான இடத்தைக் கண்டு மனம் கனத்தது.

அப்போது சேதமடைந்த ஒரு கட்டிடத்தை இன்றளவும் பாதுகாத்து வருகிறார்கள். பின் மியூசியம் சென்றோம். அங்கும் குண்டுபட்டு சேதமடைந்த வரலாற்று புகைப்படங்கள்; எரிந்து போன உடைகள் என நமது நினைவலைகளைப் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

19–ஆம் தேதி நாங்கள் சென்றது நாராதொடைஜி (Nara Todai Ji) புத்தர் கோயில். இங்கே பெரிய அளவில் புத்தர் சிலை உள்ளது. நம் ஊர் துவார பாலகர்கள் போல இரு உருவச்சிலைகளும் இருந்தன. அதை அடுத்து திறந்த வெளியில் சுற்றித் திரியும் மான் கூட்டங்கள். அடுத்து நாங்கள் சென்றது மூங்கில் காடு.

ஜப்பானில் அந்த மூங்கில் தோட்டங்களே ஒரு முக்கிய சுற்றுலா இடமாக உள்ளது. அடுத்து நடனமங்கைகளான தேவதாசிகள் வசிக்கும் ஒரு தெருவிற்கு அழைத்துச் சென்றார்கள். அதன் வழியே தங்கத் தகடு வேய்ந்த கோபுரத்துடன் கூடிய ஒரு புராதன பௌத்த கோவில் சென்று தரிசித்தோம். அடுத்த நாள் 'புல்லட்' ரயிலில் ஹிரோஷிமாவிலிருந்து ஒசாகா பயணித்தோம். மணிக்கு 350 கி.மீ. வேகத்தில் செல்லும் ரயிர். தொலைக்காட்சியில் ரசித்ததில் பயணித்தது ஓர் இனிய அனுபவம்.

– (தொடரும்)

## மண்ணும் - மண(ன)மும்

உலகுக்கு உணவு கொடுத்து, உயிர்பிக்கும், உயர்ந்த குடியாம்... உழவுத் தொழிலை சிறபிக்க செய்யும், நம் கார்காத்த வேளாளர் சமூகத்துக்கு முதல் வணக்கம்.

என்னுடைய, கடந்த 26 ஆண்டுகால, இயற்கை வேளாண் பயணத்தில், கற்றதை கற்றுக்கொண்டிருப்பதை, நம் உறவுகளோடு பகிர்வதிலும், உறவுகளுக்கு பயன்படும் என்ற நம்பிக்கையிலும், என் அனுபவங்களை, ஒவ்வொரு இதழிலும் பதிவிட விரும்புகின்றேன்.

உழவும், மண்ணும் இரட்டைச் சிற்பிகள்"

"உழவன் வெற்றி பெற – உழவுத் தொழில் சிறக்க வேண்டும்"

"உழவுத் தொழில் சிறக்க – மண் உயிரோட்டமாக இருக்க வேண்டும்".

"மண் உயிரோட்டமாக இருக்க வேண்டுமெனில் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள்," முப்பத்து முக்கோடியாக", பல்கி பெருகி, மண்ணில் உள்ள." கரிமசத்தின்" அளவு 4% மாக கூட்ட வேண்டும்.

"ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் – தன் பிள்ளை தானே வளரும்," எனபது ஆன்றோர் மொழி.

அதே போலதான், உழவர்கள் பயிருக்கு கொடுக்கும் உணவு அனைத்தையும், பயிரானது, நேரடியாக எடுத்துக் கொள்ளாது.

மண்ணில் உள்ள நுண்ணுயிர்களால் மட்டுமே "உணவு பரிமாற்றம் ", என்ற அற்புத நிகழ்வை செயல்படுத்த இயலும்.

வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்துவதும், *மண்ணின் கரிமச்சத்து 4% மாவது வர வேண்டும் என்பதே...

ஆனால் இன்றய சூழல்...மண்ணின் நிலை... ரசாயனங்களால் சீரழிக்கப்பட்டு– மண்னின் செல்வங்களான–நுண்ணுயிர்கள் அனைத்தும்– குற்றுயிரும் குலைஉயிருமாக, தன் உருவத்தை இழந்து, உயிருக்கு போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

மேலும், உழவனின் உற்ற நண்பர்களான, ஆடு, மாடுகளும், அவற்றின் சாணமும்தான் அத்தியாவசியம்.

ஆனால் அந்த சாணம் (எரு),"ஊட்டமேற்றிய பல லட்சம் களை விதைகளால் நிரம்பியும்," எருவின் தன்மை, தன்னிலை இழந்து பயனற்ற நிலையில் உள்ளது.

சரி...... இதற்கான மாற்று வழி ???

ஏக்கருக்கு 100 கிலோ பல தானிய விதைப்பே.... இச்செயல், உழவனை–மண்ணை உயிர்பிக்கும் வழியாகும்.

"100 கிலோவா", என மலைக்கும் உறவுகள், கேள்விக் கணைகளை பதிவிடலாம்.

உழவாலயம் சிவக்குமார், காவனூர், 9994010945

## சிரிக்கலாம் வாங்க!

1. சார், கொஞ்சம் காரைத் தள்ளுவீர்களா? என்று கேட்டார் ஒருவர். வழியில் போனவர் பரிதாபப்பட்டுத் தள்ள ஆரம்பித்தார். அரை மணி ஆயிற்று. கார் ஸ்டார்ட் ஆகவில்லைஎன்ன ஐயா இது? அரைமணி நேரமா தள்ளுகிறேன்; கார் இன்னும் ஸ்டார்ட் ஆகவில்லை?என்று அவர் கோபத்துடன் கேட்டார்.

   கார் ஸடார்ட் ஆகும்னு உங்களுக்கு யார் சொன்னது? ரொம்ப நன்றி. இது தான் எங்க வீடு

2. டாக்டர்!என்னைநானே கொன்றுவிடுவதுபோன்ற உணர்ச்சி எனக்கு அடிக்கடி ஏற்படுகிறது

   கவலைப்படாதீர்கள். அதற்கு நான் இருக்கிறேன்!

3. ஒரு பிரமுகர் ஒருவரை நிருபர் பேட்டி கண்டார் ரோட்டரி கிளப்,லயன்ஸ் கிளப், போன்ற ஏதாவது ஒரு சங்கத்தில் நீங்கள் அங்கத்தினரா? என்று கேட்டார்.

   இல்லாமலா? ஆனால் ஒரு சங்கமா இரண்டு சங்கமா! பெயர்களை நினைவு படுத்தி சொல்வது கஷ்டம்

   பரவாயில்லை. நீங்கள் சந்தா கட்டுகிற சங்கத்தின் பெயரைச்சொன்னால் போதும்!

4. ஒரு விருந்தில் இரண்டு பெண்கள் பேசிக்கொண்டார்கள்:

   ஏழு வருஷத்திற்கு முன்னால் இங்கு வந்திருக்கிறீர்கள் அல்லவா?

   ஆச்சரியமாக இருக்கிறதே! அதை உங்களால் எப்படிக்கண்டுபிடிக்க முடிந்தது?

   எல்லாம் உங்கள் டிரசைப்பார்த்துத்தான்!

5. ஒரு சாட்சி எத்தனையோ கோர்ட்டுகளில் அனுபவப்பட்டவராகவும், சாட்சியம் கொடுப்பதில் நிபுணத்துவம் அடைந்தவராகவும் காணப்பட்டார் அவரை மடக்க நினைத்த எதிர் கட்சி வக்கீல், நீர் படியேறாத கோர்ட்டே இல்லையா? என்று கேட்டார்.

   உண்டு! என்று சுரீர் என்று பதில் சொன்ன சாட்சி,.... நான் டென்னிஸ் கோர்ட் படியை மிதித்தது இல்லை! என்றார்.

6. இந்தச் சாலையில் கண்ணை முடிக்கொண்டு காரில் என்னால் போக முடியும்

   ஆச்சரியமாக இருக்கிறதே! எப்படி?

   இதிலென்ன ஆச்சரியம்? கார் ஓட்டப்போவது டிரைவர்தானே?

8. ஒரு மலைவாசிக்கு நகர வாழ்க்கையைப் பற்றி விளக்கிச் சொல்லிக் கொண்டு வந்தார் ஒரு பேராசிரியர்.இப்போது ..பிரச்சனை.. என்று அவர் சொன்ன சொல் மலைவாசிக்குப் புரியவில்லை.

   பிரச்சனை என்றால் என்ன?

   உன்னை மலையிலிருந்து தள்ளிவிடுகிறேன் என்று வைத்துக்கொள்.அப்போது உனக்கு ஒரு பிரச்சனை உண்டாகிறது

   என்னைத் தள்ளிவிட்டால் எனக்கு அதோடு சரி. ஆனால் பிரச்சனை உங்களுக்குத் தானே? என்று கேட்டான் மலைவாசி.

---

## ஒரு வரிச்செய்திகள்

சுற்றுச்சூழலில் மனிதனால் விடுவிக்கப்படும் பொருட்களை இருவகையினவாகக் குறிப்பிடலாம். 1. மட்கும் குப்பைகள் 2. மட்காத குப்பைகள். சில எளிதில் மிகக் குறைந்த காலத்திலேயே மட்கிவிடுகின்றன.எளிதில் மட்காத குப்பைகளே சூழலில் மிகுந்து மாசினைத் தோற்று விக்கின்றன. உயிரினங்களுக்கு பல்வேறு தீய விளைவுகளைத் தோற்றுவித்து வருகின்றன. அவை மட்குவதற்கென எடுத்துக் கொள்ளும் கால வேறுபாட்டை நீங்கள் அவசியம் அறிதல் வேண்டும். மட்காத குப்பைகளின் பயன்பாட்டை நீங்கள் குறைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்பதற்காகவே கீழ்வரும் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒரு ரயில் டிக்கெட் சிதைவடைவதற்கு(மட்குவதற்கு) 2 வாரங்களே ஆகின்றன.
2. ஒரு தினசரி பத்திரிக்கை முழுமையாக சிதைவடைய 6 வாரங்களே ஆகின்றன.
3. பருத்தி முழுமையாக மண்ணில் மட்கிச்சிதைவதற்கு 1–5 மாதங்கள் ஆகின்றன.
4. ஒரு துண்டு கயிறு முழுமையாகச் சிதைவதற்கு 3–14 மாதங்களாகின்றன.
5. பிளைஉட் மரம் மண்ணில் முழுமையாகச் சிதைவதற்கு 1–3 ஆண்டுகளாகின்றன.
6. கம்பளி சாக்ஸ் ஒன்று முழுமையாகச் சிதைவதற்கு 1–5 ஆண்டுகளாகின்றன.
7. பால் பாக்கெட் கவரை முழுமையாக மண்ணில் மட்கிச்சிதைவதற்கு 5 ஆண்டுகள் ஆகின்றன.
8. தோலினாலாகிய செருப்பு ஒன்று முழுமையாகச் சிதைவதற்கு 20–40 ஆண்டுகளாகின்றன.
9. ஒரு நைலான் துணி முழுமையாகச் சிதைவதற்கு 30–40 ஆண்டுகளாகின்றன.
10. ஒரு தகரம் ஒன்று முழுமையாகச் சிதைவதற்கு 50 ஆண்டுகளாகின்றன.

## போகிற போக்கில்

– கோலாகலன்.

எழுச்சூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு தெய்வநாயகி உடனுறை நல்லிணக்கீசுவரர் கோயிலுக்குச் செல்லும் ஒரு வாய்ப்பு கிட்டியது. மிகப்பழமையான இத்திருக்கோயில் அழகும் அமைதியும் நிறைந்தது. பரபரப்பில்லா ஆலயங்களுள் இதுவும் ஒன்று. அங்கு பார்த்தால் சிவகாமி சித்தர். உள்ளத்தில் உவகை பொங்க அவரைவணங்கினேன். வாழ்த்தினார். குளக்கரையில், அமரச்சொன்னார், சிறு கூட்டம் கூடியது.

அடியேனை பொருள் பொதிந்த கருத்துடன் நோக்கினார். "உலகத்தோடு பொருந்தி வாழ முடியவில்லை சுவாமி. இதனால் என் உள்ளத்தில் எண்ணற்ற பிணக்குகள் எழுகின்றன. அது மெல்ல மெல்ல இடியாப்பச் சிக்கலாகிவிட்டது. என் அமைதியைக் கெடுக்கிறது சுவாமி" என்றேன்.

மெல்லச் சிரித்த சித்தர் பேசலுற்றார். "வல்லாளுமை உள்ள சிறுபான்மையோரை வெல்ல பெரும்பான்மையோரால் முடிவதில்லை. காரணம் இவர்களிடம் ஒற்றுமை மிகவும் குறைவு. அதனால் உறுதிப்பாடும் இல்லை. இது ஒரு புதிர்தான். புரியாதது என்பர். எவ்வித தீய பழக்கமும் இல்லாதோர் அகாலமரணம் அடைவது; பிறரைக் காயப்படுத்தாமல் இருப்போர் பெரிதும் காயப்படுத்தப்படுவது; உற்றம் சுற்றம் நிறைய வேண்டும் என செயல்படுவோர் முற்றிலும் தனிமைப்படுத்தப்படுவது; மிகவும் சிக்கனமாக இருப்போர் நலிவது; அகம்பாவம், ஆணவம், அலட்சியம் கொண்டோர் செல்வர்களாகவும் செல்வாக்குடையோராகவும் திகழ்தல், பன்முறை உதவியவர்கள் ஏதோ ஒரு சூழலில் ஒரு முறை உதவிட முடியாதபொழுது அவர்கள் அநியாயமாக வெறுக்கப்படுவது; இது போன்றவற்றிற்கு காரணம் பலராலும் காண முடியாது. சுருங்கச் சொன்னால் இவை அவர்கள் வாங்கி வந்த வரம். குழப்பமில்லாமல் எண்ணிப்பார்த்தால் இவையாவும் பக்குவப்படுத்திக்கொள்ள அடைந்த சந்தர்ப்பமே! இது போன்ற இடர்பாடுகளில் ஒட்டி வாழ்தல் என்பது அரிதே!

சில நிகழ்வுகளை முற்றிலும் மறந்துவிடுதலும், சிலரை மன்னித்து விடுதலும், சிலரைக் கடந்து சென்றுவிடுதலும், சிலரை வெறுத்து ஒதுங்கிவிடுதலும், இன்னும் சிலரை ஒருவழியாகத் தலைமுழுகிவிடுதலும் வாழ்வை மிகவும் எளிதாக்கும். எதனையும், எவரையும், எதற்காகவும் எப்பொழுதும் சுமந்து கொண்டே திரிதல் வாழ்வைப் பெருஞ்சுமையாக்கிவிடும்.

(காந்தி விரும்பிய மூன்று குரங்குப் பொம்மைகள் இன்று பெருமளவில் நம் கவனத்தை ஈர்க்கின்றன. கண்களைப் பொத்திக் கொண்டிருந்த குரங்கு அரசின் நீதியாகி விட; காதுகளைப் பொத்திக் கொண்டிருந்த குரங்கு அரசாங்கமாகிவிட; வாயைப் பொத்திக் கொண்டிருந்த குரங்கு மக்களாகிவிட என்னாகும் உலகில் பலநாடுகளில் இதுதான் நிலைமை. இதில்தான் வாழ்ந்தாக வேண்டும்)

எதற்கும் ஒரு தொடக்கம் இருப்பதுபோல், உறுதியாக அதற்கு ஒரு முடிவும் உண்டு என்பதை நாம் உணரவேண்டும்.

நேர்மறை (Positive) எண்ணத்தோடுஇருங்கள். இருப்பின் எதிர்மறை (Negative) எண்ணத்தார் உங்களிடம் நெருங்க மாட்டார்; என்றாலும் இருந்தாலும் (if), தெரியாது (don't know), ஆனாலும் (but), நடக்காது (impossible), முடியாது (couldn't), கிடைக்காது (unavailable) எனச் சொல்வோரிடம் செல்லாதீர். ஒதுங்கியே இருங்கள்.

உற்சாகத்தோடு உறவாடுங்கள். சோகத்தை அண்ட விடாதீர்கள். சற்றே காலத்தாழ்வு ஏற்படினும் வெற்றி உறுதி. "என்று கூறி முடித்த சிவகாமி சித்தர் எல்லோரையும் ஒரு சுற்றுப் பார்த்து விட்டு என்னை நோக்கினார்." சிதம்பரம் கபீர்தாஸ் அண்மையில் சிவபதவி அடைந்துவிட்டார். அவர் ஒரு பக்குவ ஆன்மா. அறிவு ஜீவி, அன்பு, அடக்கம், பண்பு, பரிவு, பக்தி, ஒழுக்கம், உதவி, தொண்டு என அனைத்துக் குணங்களிலும் சிறந்த அவர் ஓர் எழுத்தாளரும் கூட சித்தாந்தியான அவர் வாழும் முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. முழுமையாக, வெற்றிகரமாக வாழ்ந்த சாதனையாளர்களுள் அவரும் ஒருவர். உலகோடு ஒட்டி வாழ்வது எப்படி என்று. அதாவது ஒட்டுவதோடு ஒட்டி, ஒட்டாதவற்றோடு விலகி வாழ்வது எவ்வாறு என்பது புரிந்துவிட்டால் எவர் வாழ்வும் வெற்றியே! சாதனையே!

வாழ்வென்பது வாழ்வதற்கே
தாழ்வென்பது தவிர்ப்பதற்கே
ஒட்டி வாழ்தல் அறிவுடைமை
கொட்டக் கொட்டக் குனியாமல்
வெட்டி வாழ்தல் விவேகமே
ஆடு பூவே பாடு பூவே
ஆனந்தம் வாழ்வென்று கூத்தாடு பூவே
என ஆடிப்பாடிக் கொண்டே
சிவகாமிசித்தர் புறப்பட்டார்.

## ‘ஆயிரம் பிறை கண்ட செம்மல்’
## வணங்குகிறோம்



சகஸ்ர சந்திர தரிசன சதாபிஷேகம் காணும்
கார்குல செம்மல்

## திரு. ச. வெங்கடேசன் பிள்ளை
## திருமதி ஞானாம்பிகை

தம்பதியினரை வணங்குகிறோம்

அன்பின் உருவமாய்
ஆற்றலின் வடிவமாய்
இமயத்தின் சிகரமாய்
ஈதலின் எடுத்துக்காட்டாய்
உவகையின் அணியாய்
ஊக்கத்தின் உறைவிடமாய்
எழுச்சியின் ஏந்தலாய்
ஐயமற்ற வாழ்வாய்
ஒற்றுமையின் சக்தியாய்
ஓய்வின்றி உழைத்து
ஔவையின் வழி நடந்து
“கார்குல” மக்களுக்கு
கலங்கரை விளக்கமாய்
விளங்குகின்ற பேராற்றலே
வணங்கி மகிழ்கிறோம்.



M. நடனசபாபதி மற்றும் குடும்பத்தினர்
ஆடிட்டர்
மைலாப்பூர்

# நூற்றாண்டு நினைவு அஞ்சலி



1925 2025

கார்குலச்செம்மல்; எளிமையின் சிகரம்

## கொத்தங்குடி G. இராமச்சந்திரன் (G.R)

சுற்றஞ்சூழ் கொற்றவன் குடிதனில்
கொற்றவனாய் இருந்திட்டு, பின்
மனம் விரும்பிய மாயூரத்தில் மன்னனாய்விளங்கி
நீயே துணை எனத்தேடி வரும்
நேயர்கள் துயர்தீர
உதவிக்கரம் நீட்டும் நண்பனாய், பண்பாளராய்
அறிஞர் அண்ணாவின் அருமைத் தோழராய்
அகிலத்தில் இல்லறம்தனை சிறப்புடன் நடத்தி
எங்களை நன்முறையில் வெற்றிகரமாக வாழ வைத்த
தங்களின் திருவடிகளைத் தொழுகின்றோம் நன்றியுடனே!

**மகள்கள், மருமகன்கள்**
**மகன்கள், மருமகள்கள்**
**பேரன்கள், பேத்திகள்**
**கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள்**
மற்றும்
**உறவினர்களும், நண்பர்களும்**

# 14–ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
30.05.1937

மறைவு :
03.08.2011

மயிலாடுதுறை, கூறைநாடு, பெரிய மணவெளித்தெரு, தொழுதுட தெய்வத்திருவாளர்கள். S.திருமேனிப்பிள்ளை - பட்டம்மாள் அவர்களின் மூத்த குமாரரும் எங்களுடைய சகோதரரும் திருமதி. P.K. பங்கஜாட்சி (முதுகலைப்பட்டதாரி ஆசிரியை ஓய்வு அரசு பெண்கள் மேனிலைப்பள்ளி, மயிலாடுதுறை) அவர்களின் கணவரும் கல்வித்துறையில் அரும்பணியாற்றிய, பெருந்தகை தன்னலம்கருதாது குடும்பநலமே பெரிதென நினைத்த பண்பாளர், தூய சிந்தனையாளர், செந்நெறிச் செல்வர்

## தெய்வத்திரு. தி.ஸ்ரீநிவாசன் அவர்கள்

(பணி நிறைவு, கண்காணிப்பாளர் , மாவட்டக்கல்வி அலுவலகம், மயிலாடுதுறை)

*என்றும் தங்கள் நினைவலைகளில் வாழும்....*

B. வேதவல்லி பாலசண்முகம், திருவிடைக்கழி.
தி. சுந்தரி திருஞானசம்பந்தம், பூவிழுந்தநல்லூர்.
ஜெ. உமாராணி - ஜெயபாலன், மயிலாடுதுறை.

தி. சௌந்தரராஜன் - வசந்தா, சென்னை.
தி. பன்னீர்செல்வம் - வசந்தா, மயிலாடுதுறை.
தி. செல்வகுமார் - பொன்னி, சென்னை.
தி. ரவிகுமார் - மலர், மயிலாடுதுறை.

மகன்கள், மகள்கள், பெயரன்கள், பெயர்த்திகள்
கொள்ளுப்பெயரன்கள், மற்றும் கொள்ளுப்பெயர்த்திகள்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
01–06–1944

மறைவு:
29–05–2025

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், ஆட்கொண்டநத்தம் தெய்வதிரு. V. இராஜசேகரன் பிள்ளை – தெய்வதிருமதி. R. கண்ணம்மாள் அவர்களின் மகனும் தெய்வதிருமதி. R. இராதா அவர்களின் கணவரும் எங்களது தந்தையும், கடலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஓய்வு பெற்ற மேலாளர்

## திரு. R. **முருகேசன் பிள்ளை** அவர்கள்

**29–05–2025** வியாழக்கிழமை இரவு **10.10** மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மகள் : **S. ஜெயந்தி**

மருமகன் : **S. சிங்காரவேலன்**

பேரன் : **S. ப்ரணாவ்**

பேத்தி : **S. மித்ராப்ரணாவ்**

மகன் : **M. முத்துக்குமார்**

மருமகள் : **M. சுபா முத்துக்குமார்**

பேத்தி : **M.. ஹர்சினி**

பேரன் : **M. தருண்குமார்**

மற்றும்

**உற்றார், உறவினர்கள், நண்பர்கள்**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
28.08.1960

மறைவு
19.06.2025

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, ஆர்ப்பாக்கம்

## திரு. A. ராஜேந்திரன் பிள்ளை அவர்கள்

(Retd. PG Asst, Chemistry/Asst. Headmaster, Govt.Hr.Sec.School, எலப்பாக்கம்)

19.06.2025 வியாழக்கிழமை காலை 11.10 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஆர்ப்பாக்கம், தெய்வத்திருவாளர்கள். அகோரம் பிள்ளை–மீனாட்சி என்ற நவரத்தினத்தின் மூன்றாவது ரத்தினமே!
பெற்றோரின் வறுமையிலும் உழைப்பின் நம்பிக்கையிலும் வளர்ந்தவர்.
மென்மை, அமைதி குணங்களை குணாதிசயமாகக் கொண்டவர்.
அரசுப்பள்ளி ஆசிரியராக, பிள்ளைகளுக்குப் பெற்றோராக,
எண்ணற்ற பணிகளைச் சுமந்து, ஏற்றம் கொண்ட ஏணி நீ!
ஆனால் இன்று உன் சுமைகளை இறக்கி, காற்றோடு காற்றாகக் கலந்து விட்டாய்
என்றும் உன் நினைவுகள் எங்கள் வாழ்க்கையில் தொடரட்டும்.

### சகோதரர்கள்

**Dr. A. SINGARAVELU, Ph.D.**
Correspondent, ZIGMA Matriculation Hr. Sec. School, Medavakkam, Chennai

**Er. A. DURAI, B.E.**
Managing Director, Lakshmi Publications and Suchitra Publications, Perumbakkam, Chennai

**Mr. A. RAMAKRISHNAN, B.Sc.**
Ex. Village President, Arpakkam (PO), Sirkali (Tk)

**Mr. A. RAMESH, M.Sc.,**
Proprietor, A.R.S. Publications and AMR Group of Traders, Sirkali

**சகோதரிகள் : P. SUNDARI, G. SENTHAMARAI**

**மனைவி : R. VIJAYALAKSHMI**, Rtd, Teacher, Govt. High School, Ramapuram, Maduranthagam TK

பேரன்கள், பேத்திகள் மற்றும் உறவினர்கள்

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி





தெய்வத்திருமதி. **G.சரஸ்வதி, B.Sc.,**
கண்தான வள்ளல்

மலர்ந்தது 28.11.1949 — உதிர்ந்தது 25.06.2024

தெய்வத்திருமதி. **S.லட்சுமி, B.A.,**
கண்தான வள்ளல்

மலர்ந்தது 24.09.1954 — உதிர்ந்தது 21.05.2024

**D/o. Dr.K.கணபதி**
Retd. Dean, Annamalai University

## நீங்கள் எப்போதும் எங்களுடன்
## நாங்கள் எப்போதும் உங்களுடன்...

இங்ஙனம்

**Er.S.கோவிந்தராஜன்,** B.E.,
**Er.G.சிவக்குமார்,** M.S.,
**S.யோகப்பிரியா,** M.Sc.,
செல்வி. **S.வர்ஷா,** B.Sc.,
செல்வன். **S.விஷால்**
**Er.G.மீனா,** B.E.,
**Er.V.K.ராஜேந்திரன்,** M.Tech.,
செல்வி. **R.ரம்யா,** MPH
செல்வன். **R.ராகுல்,** B.S.,

**ம.அ.சீனுவாசன்,** M.Com., M.Ed.,
**Er.S.பிரவின்குமார்,** B.E.,
**Dr.P.ரம்யா,** MBBS, DGO.,
செல்வன். **P.தீபக்**
**Er.S.சரவணகுமார்,** B.Tech.,
**Er.S.சுவாதிகா,** B.E.,
செல்வன். **S.சித்தார்த்**

நெ.7, திரிபுரசுந்தரி நகர்,
தென்பாதி, சீர்காழி.
செல் : 8220809333




**SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM**
**SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION**

# WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

## CUT DOWN YOUR ELECTRICITY COST

**MARUTHI POWER CONTROL SYSTEM**

**CALL US @ 9841828077**

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com



S.SELVAKUMAR - C.E.O

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th July 2025

CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

First Hotel From The Temple

## Experience the Future of Hospitality:

**Our hotel rooms are seamlessly integrated with smart AI technology to offer a more personalized, comfortable, and efficient stay. From intelligent lighting and climate control to voice-assisted concierge services and instant room service requests, every detail is designed to make your experience smoother and smarter...**












**Discover convenience at your command—where innovation meets relaxation.**

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**